தினபூமி
thinaboomi.com
பூமி: 34 சுற்று: 49 மார்கழி 17
RNI Regn. No.55306/93 TN/CCN/556/2012-2014
சென்னை, வியாழன், ஜனவரி 01, 2026
சென்னை · மதுரை · திருச்சி · கோவை · நெல்லை · சேலம் · வேலூர் · புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**அதிபர் ட்ரம்ப் அரசுக்கு பதிலடி: அமெரிக்கர்கள் மீது பயணத்தடை விதித்தது 2 ஆப்பிரிக்க நாடுகள்..!**
....2-ம் பக்கம்

**சபரிமலையில் மகர ஜோதி தரிசனத்திற்கு 35 ஆயிரம் பக்தர்கள் மட்டுமே அனுமதி**
...3-ம் பக்கம்

**டி-20 கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகள்: தீப்தி சர்மா சாதனை**
....6-ம் பக்கம்





முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று முகாம் அலுவலகத்தில், ஆங்கிலப் புத்தாண்டையொட்டி, தமிழ்நாடு தலைமை செயலாளர் முருகானந்தம் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தமிழ்நாடு அமைச்சரவை ஜன. 6-ம் தேதி கூடுகிறது

## வரும் சட்டமன்ற கூட்டத்தொடர் குறித்து ஆலோசனை

சென்னை, ஜன. 01-

**முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஜனவரி 6-ம் தேதி தமிழக அமைச்சரவைக் கூட்டம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் சட்டமன்ற கூட்டத்தொடர், கவர்னர் உரையில் இடம் பெற வேண்டிய அம்சங்கள் மற்றும் இடைக்கால பட்ஜெட் தாக்கல் உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்படும் என்று தகவல் வெளியாகி உள்ளது.**

**கூட்டத்தொடர்...**

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில், சென்னை தலைமைச்செயலகத்தில் வருகிற ஜனவரி 6-ம் தேதி தமிழக அமைச்சரவைக் கூட்டம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 20-ம் தேதி தமிழக சட்டமன்ற கூட்டத்தொடர் தொடங்க உள்ள நிலையில் அதற்கு முன்னதாக அமைச்சரவைக் கூட்டம் நடைபெற உள்ளது.

**பட்ஜெட் தாக்கல்....**

இந்த அமைச்சரவைக் கூட்டத்தில், சட்டமன்ற கூட்டத்தொடர், கவர்னர் உரையில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் மற்றும் இடைக்கால பட்ஜெட் தாக்கல் உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்படும் என்று தகவல் வெளியாகி உள்ளது.

மேலும் ஓய்வூதியத் திட்டங்கள் தொடர்பாக ககன்தீப் சிங் பேடி குழு முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் அளித்த இறுதி அறிக்கை குறித்தும், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், செவிலியர்கள் கோரிக்கை தொடர்பாகவும் இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### ஆசிரியர்கள், அரசு ஊழியர்களின்

# கோரிக்கைகள் தொடர்பாக அமைச்சர்கள் ஆலோசனை

சென்னை, ஜன. 01-

**அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பாக சென்னை தலைமை செயலகத்தில் அமைச்சர்கள் ஆலோசனை மேற்கொண்டனர்.**

புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும், காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும், ஆசிரியர் தகுதித் தேர்வை ரத்து செய்ய வேண்டும், தொகுப்பூதியம், மதிப்பூதியம், சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணியாற்றுவோருக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி வருகிற 6-ம் தேதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட போவதாக ஜாக்டோ ஜியோ அமைப்பு அறிவித்துள்ளது.

இந்த நிலையில் ஆசிரியர்கள் உள்ளிட்ட அரசு ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பாக சென்னை தலைமை செயலகத்தில் அமைச்சர்கள் ஆலோசனை மேற்கொண்டனர்.

இந்த ஆலோசனையில் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, எ.வ.வேலு, அன்பில் மகேஸ், தலைமைச் செயலாளர், நிதிச் செயலர் உள்ளிட்டோர் பங்கேற்றனர். முன்னதாக ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக ககன்தீப் சிங் தலைமையிலான குழு முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் நேற்று முன்தினம் இறுதி அறிக்கையை சமர்ப்பித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### ஏற்றமிகு ஆண்டாக 2026 அமையட்டும்:

# முதல்வர் மு.க.ஸ்டாலின் புத்தாண்டு வாழ்த்து

சென்னை, ஜன. 01-

**2025 ஆண்டில் மாநில உரிமைகளுக்கான நமது போராட்டங்களுக்கு குறைவே இல்லை என்று தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைதியும், நல்லிணக்கமும், மகிழ்ச்சியும், புதிய வெற்றிகளும் நிறைந்த ஏற்றமிகு ஆண்டாக 2026 அனைவருக்கும் அமைந்திட எனது புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று அவர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.**

ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருப்பதாவது:- பல வகைகளிலும் தமிழ்நாட்டுக்கு வெற்றிகரமான ஆண்டாக அமைந்த 2025-க்கு விடைகொடுத்து, இதுவரை காணாத மாபெரும் வெற்றியை வழங்கவுள்ள 2026-ல் அடியெடுத்து வைக்கத் தயாராகிறோம்.

தமிழ் வளர்ச்சிக்கும் தமிழர் எழுச்சிக்கும் தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்கும் மிகச் சிறந்த ஆண்டாக 2025 அமைந்தது என்றால் மிகையாகாது. பொருளாதார வளர்ச்சியிலும் - ஜி.எஸ்.டி.பி. வளர்ச்சியிலும் முதலிடம் என நமக்குக் கிடைத்துள்ள அங்கீகாரங்கள் 2030-க்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் எனும் நம் கனவுக்கு வலுவூட்டுகிறது.

மகளிர், உழவர், மாணவர், மாற்றுத்திறனாளிகள், மீனவர், வணிகர், நெசவாளர், விளிம்புநிலை மக்கள், தொழில்முனைவோர், விளையாட்டு வீரர்கள் என அனைத்துத் தரப்பினரின் மனங்களையும் மகிழ்விக்கும் திட்டங்கள் நிறைந்த ஆண்டாக 2025 அமைந்தது. வீடற்ற மக்களுக்கு வீடுகளை வழங்கும் கலைஞர் கனவு இல்லம் திட்டமும், இதுவரை இல்லாத அளவுக்குப் பட்டாக்களை வழங்கி நிலம் எனும் அதிகாரத்தை எளியோருக்கு வழங்கியதும் நமது திராவிட மாடல் அரசில் முன்னுரிமை யாருக்கு என்பதற்குச் சான்றாக அமைந்தன.

உங்களுடன் ஸ்டாலின் முகாம்களால் மக்களின் தேவைகள் உடனடியாகத் தீர்க்கப்பட்டு வருகின்றன, நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்களால் உயர்தரச் சிறப்பு மருத்துவச் சேவைகள் மக்களுக்குக் கிடைத்து வருகின்றன. கல்வியில் சிறந்த தமிழ்நாடு, வெல்லும் தமிழ்ப் பெண்கள் என 2025-ல் தலைநிமிர்ந்துள்ளோம். காலை உணவுத் திட்டமும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டமும் பெருமளவில் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களுக்கும் பரவலான, சமத்துவமான வளர்ச்சியும் சாத்தியமாகி வருகிறது.

தொகுதி மறுசீரமைப்பு ஆபத்தை எதிர்த்து அகில இந்திய அளவில் அணிதிரட்டல், சிறப்புத் தீவிர வாக்காளர் திருத்தப் பட்டியல் சூழ்ச்சியில் இருந்து நம் மக்களின் வாக்குரிமையைக் காப்பது, மாநில சுயாட்சிக்காக

(கடைசி பக்கம் பார்க்க)

### 2026 புத்தாண்டு கொண்டாட்டம்:

# தமிழகம் முழுவதும் கடும் கட்டுப்பாடுகள்

## பட்டாசு வெடிக்க - கடலில் இறங்க பொதுமக்களுக்கு தடை

சென்னை, ஜன. 01-

**2026 புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு அசாம்பாவிதம் ஏற்படுவதை தடுக்க தமிழ்நாடு முழுவதும் 1 லட்சம் போலீசார் குவிக்கப்பட்டு தீவிர கண்காணிப்பில் ஈடுபடவுள்ளனர். மேலும் போதை பொருட்களை பயன்படுத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரித்துள்ள போலீசார், இன்று பொதுமக்கள் கடலில் இறங்கவோ, குளிக்கவோ தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். மேலும் பட்டாசு வெடிக்கவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.**

2025-ம் ஆண்டு நேற்று இரவுடன் விடைபெற்று நள்ளிரவு 12 மணிக்கு 2026-ம் ஆண்டு பிறந்தது. இதையொட்டி தமிழகம் முழுவதும் புத்தாண்டு கொண்டாட்டங்கள் நேற்று இரவு களை கட்டியது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளிலும் புத்தாண்டு கொண்டாட்டத்துக்கான ஏற்பாடுகள் தீவிரமாக செய்யப்பட்டிருந்தன. குறிப்பாக சென்னையில் உள்ள நட்சத்திர ஓட்டல்கள் மற்றும் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள பண்ணை வீடுகளிலும் நேற்று இரவு புத்தாண்டு கொண்டாட்டத்துக்காக அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

நட்சத்திர விடுதிகள் மற்றும் பண்ணை வீடுகளில் புத்தாண்டையொட்டி ஆட்டம், பாட்டம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இதன்மூலம் தமிழகம் முழுவதும் புத்தாண்டு கொண்டாட்டத்துக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு நேற்று பிற்பகலில் இருந்தே இளைஞர்கள் அதற்கு தயாரானார்கள். மெரினா கடற்கரையில் புத்தாண்டையொட்டி பாதுகாப்பு காரணங்களுக்காக கண்காணிப்பு கோபுரங்களும் அமைக்கப்பட்டிருந்தன. நேற்று இரவு 9 மணியில் இருந்து மெரினா கடற்கரை

(கடைசி பக்கம் பார்க்க)

### அ.தி.மு.க. வாக்குகள் ஒன்று கூட விடுபடக்கூடாது:

# சட்டப்பேரவை தேர்தல் பணிகளை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும்

## மாவட்ட செயலாளர்களுக்கு இ.பி.எஸ். அறிவுறுத்தல்

சென்னை, ஜன. 01-

**சட்டப்பேரவை தேர்தல் பணிகளை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் என்றும் தொகுதி வாரியாக வெற்றி பெறக்கூடிய வேட்பாளர்களின் பட்டியலை சமர்ப்பிக்க வேண்டும் என்றும், அ.தி.மு.க. ஆதரவு வாக்குகளில் ஒன்று கூட விடுபடக்கூடாது என்றும் மாவட்ட செயலாளர்களுக்கு எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தியுள்ளார்.**



தமிழகத்தில் அடுத்த ஆண்டு (2026) ஏப்ரல் மாதம் சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. தேர்தலுக்கு இன்னும் 3 மாதங்களே இருக்கும் நிலையில் அரசியல் கட்சிகள் எல்லாம் தேர்தல் பரீட்சைக்கு தயாராகி வருகின்றன. பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. கூட்டணியில் தற்போது வரை பா.ஜ.க., த.மா.கா.ஆகிய இரு கட்சிகள் மட்டுமே உள்ளன. அ.தி.மு.க.-பா.ஜனதா கூட்டணியை உறுதி செய்தபோதிலும், தொகுதி பங்கீடு குறித்து வெளிப்படையாக இரு தரப்பிலும் எதுவும் பேசவில்லை. ஆனால் இரு தரப்பிலும் சில மறைமுக பேச்சுவார்த்தைகள் நடந்து வந்தன.

இதற்கிடையில் அண்மையில் சென்னை வந்த தமிழக பா.ஜ.க .தேர்தல் பொறுப்பாளரும், மத்திய அமைச்சருமான பியூஷ் கோயல், எடப்பாடி பழனிசாமியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். கூட்டணியில் தொகுதி பங்கீடு தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்றது. இதில் வருகிற தேர்தலில் எத்தனை தொகுதிகளில் போட்டியிடுவது, கூட்டணியில் மேலும் சில கட்சிகளை இணைப்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாக தெரிகிறது. மேலும் அ.தி.மு.க.-பா.ஜனதா மற்றும் மற்ற கட்சிகளுக்கு இடையே தொகுதி பங்கீடு இறுதியானதாகவும் தகவல் வெளியானது.

சட்டமன்ற தேர்தல் நெருங்கு நிலையில், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்த கூட்டம் அரசியல் களத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

இந்த கூட்டத்தில், தேர்தல் பணிகளை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும். மக்களை சந்தியுங்கள். கூட்டணியை நான் பார்த்துக்கொள்கிறேன். தி.மு.க. அரசு செய்யும் தவறுகளை மக்களிடம் கொண்டு செல்லுங்கள். எஸ்.ஐ.ஆர். பணிகளை கண்காணியுங்கள். அ.தி.மு.க. ஆதரவு வாக்குகளில் ஒன்று கூட விடுபடக்கூடாது என மாவட்ட செயலாளர்களுக்கு எடப்பாடி பழனிசாமி அறிவுறுத்தி உள்ளார். மேலும் தொகுதி வாரியாக வெற்றி பெறக்கூடிய வேட்பாளர்களின் பட்டியலை சமர்ப்பிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்.

### 2.22 கோடி ரேஷன் கார்டுகளுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு:

# தமிழ்நாடு முழுவதும் டோக்கன்கள் வழங்கும் பணி விரைவில் துவக்கம்

## ரொக்கப்பணம் குறித்த அறிவிப்பும் ஓரிரு நாளில் வெளியாகிறது

சென்னை, ஜன. 01-

**தமிழ்நாடு முழுவதும் உள்ள 2.22 கோடி ரேஷன் அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பிற்கான டோக்கன்கள் வழங்கும் பணி விரைவில் தொடங்கவுள்ளது. இதற்கான டோக்கன் அச்சிடப்பட்டு தற்போது தயார் நிலையில் உள்ளன. மேலும் பொங்கல் பரிசு தொகுப்புடன் ரொக்கப்பணம் எவ்வளவு வழங்கப்படவுள்ளது என்பது குறித்த அறிவிப்பும் ஓரிரு நாளில் வெளியாகவுள்ளது.**

தமிழகம் முழுவதும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு 2 கோடியே 22 லட்சத்து 72 ஆயிரம் ரேஷன் அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கப்பட இருக்கிறது. இதற்காக 2 கோடியே 22 லட்சத்து 91 ஆயிரத்து 710 கிலோ பச்சரிசியும், அதே அளவு சர்க்கரையும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், கரும்பு, முந்திரி, திராட்சையும் வழங்கப்படும் என கூறப்படுகிறது.

அத்துடன் இலவச வேட்டி - சேலையும் வழங்கப்பட உள்ளது. இதற்காக, 1 கோடியே 77 லட்சத்து 22 ஆயிரம் வேட்டியும், 1 கோடியே 77 லட்சத்து 64 ஆயிரம் சேலையும் நெசவாளர்களிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதில், 85 சதவீத வேட்டி - சேலைகள் ரேஷன் கடைகளுக்கு அனுப்பப்பட்டுவிட்டன.

இந்த முறை பொதுமக்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பது, பொங்கல் பரிசுடன் ரொக்கப் பணம் எவ்வளவு என்பதுதான். தேர்தல் வருவதால் இந்த முறை கட்டாயம் கிடைக்கும் என்று நம்புகின்றனர். 2021-ம் ஆண்டு அ.தி.மு.க .ஆட்சி காலத்தில், தேர்தலுக்கு முந்தைய பொங்கல் பண்டிகையின்போது ரூ.2,500 ரொக்கப் பணம் வழங்கப்பட்டது. எனவே, தி.மு.க. ஆட்சியில் அதைவிட கூடுதலாக கிடைக்கும் என்று மக்கள் நம்புகின்றனர். தமிழக அரசும் ரூ.3 ஆயிரம் வழங்குவதா, அல்லது ரூ.4 ஆயிரம் வழங்குவதா என்று ஆலோசனை நடத்தி வருகிறது.

இது ஒருபுறம் நடந்து

(கடைசி பக்கம் பார்க்க)


**மார்க்கெட் விலை நிலவரம்**

BSE 545.52 பாயின்ட் 85,220.60

NSE 190.75 பாயின்ட் 26,129.60



**தங்கம்** 1 சவரன் ₹99,840 1 கிராம் ₹12,480



**வெள்ளி** 1 கிலோ ₹257,000 1 கிராம் ₹257.00

**டாலர்** ₹89.87

**பெட்ரோல்** ₹100.75 **டீசல்** ₹92.34

### அதிபர் ட்ரம்ப் அரசுக்கு பதிலடி:

# அமெரிக்கர்கள் மீது பயணத்தடை விதித்தது 2 ஆப்பிரிக்க நாடுகள்...!

**மாலி, ஜன. 01-**

அதிபர் டொனால்ட் ட்ரம்ப்பின் உத்தரவுக்குப் பதிலடியாக மாலி மற்றும் புர்கினா ஃபஸோ ஆகிய 2 நாடுகளின் அரசுகள் அமெரிக்கர்கள் மீது பயணத் தடை விதித்துள்ளன.



மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள மாலி மற்றும் புர்கினா ஃபஸோ உள்பட 20-க்கும் அதிகமான நாடுகளின் குடிமக்கள் அமெரிக்காவுக்குள் நுழைவதற்குத் தடை விதித்து கடந்த டிச.16 ஆம் தேதி அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டார். இந்த நிலையில், அதிபர் ட்ரம்ப் விதித்த உத்தரவுக்கு பரஸ்பர நடவடிக்கையாக, மாலி மற்றும் புர்கினா ஃபஸோ ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் தங்களது நாடுகளுக்குள் அமெரிக்கர்கள் நுழைய அனுமதி இல்லை என அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து, மாலியின் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பரஸ்பர கொள்கைகளின் அடிப்படையில் மாலி குடிமக்களின் மீது விதிக்கப்பட்டுள்ள அதே தடைகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்தும் அமெரிக்கக் குடிமக்களுக்கும் பொருந்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல், புர்கினா ஃபஸோவின் வெளியுறவு அமைச்சர் கராமகோ ஜீன் - மேரி தரோரே கையெழுத்திட்ட அறிக்கையில், அமெரிக்கக் குடிமக்கள் மீது தடை விதிக்கப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது. ஏற்கெனவே, ராணுவப் புரட்சியின் மூலம் ஆட்சி அமைந்த மாலி மற்றும் புர்கினா ஃபஸோ அரசுகளுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# ஒரே நாளில் இரண்டு முறை குறைந்தது தங்கத்தின் விலை

### சவரன் ரூ. 99,840 ஆக சரிவு

**சென்னை, ஜன. 01-**

ஒரே நாளில் நேற்று தங்கம் சவரனுக்கு ரூ. 960 ரூபாய் குறைந்தது, ஒரு சவரன் 99 ஆயிரத்து 840 ரூபாய்க்கு விற்பனையானது.

தங்கம், வெள்ளி விலை கடந்த ஒரு மாதமாக 'கிடுகிடு' வென உயர்ந்து வந்தது. தினமும் புதிய உச்சத்தை கடந்த வண்ணமே விலை பயணம் ஆனது. தங்கத்தை பொறுத்தவரையில், கடந்த 28-ம் தேதி ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 4 ஆயிரத்து 800-க்கு விற்பனை ஆனது புதிய உச்சமாக பார்க்கப்பட்டது. கொஞ்சமாவது விலை குறையாதா? என பார்த்து கொண்டிருந்த நேரத்தில் நேற்று முன்தினம் தங்கம் விலை அதிரடியாக சரிந்து இல்லத்தரசிகள், மக்களுக்கு மகிழ்ச்சியை கொடுத்துள்ளது.

நேற்று முன்தினம் நிலவரப்படி, கிராமுக்கு ரூ.420-ம், சவரனுக்கு ரூ.3 ஆயிரத்து 360-ம் குறைந்து, ஒரு கிராம் ரூ.12 ஆயிரத்து 600-க்கும், ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 800-க்கும் விற்பனை ஆனது. இந்நிலையில் தங்கம் விலை நேற்று காலை குறைந்தது சென்னையில் நேற்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று கிராமுக்கு ரூ.50 குறைந்து ஒரு கிராம் ரூ.12,550-க்கும், சவரனுக்கு ரூ.400 குறைந்து ஒரு சவரன் ரூ.1,00,400-க்கு விற்பனையானது.

இந்த நிலையில் நேற்று மாலை மீண்டும் தங்கம் விலை குறைந்தது. ஒரு சவரனுக்கு ரூ. 560 குறைந்தது. இதனால் நேற்று ஒரே நாளில் சவரனுக்கு ரூ. 960 ரூபாய் குறைந்தது, தற்போது ஒரு சவரன் 99 ஆயிரத்து 840 ரூபாய்க்கு விற்பனையானது. வெள்ளி விலையும் நேற்று முன்தினம் ஒரே நாளில் கிராமுக்கு ரூ.23-ம், கிலோவுக்கு ரூ.23 ஆயிரமும் குறைந்து, ஒரு கிராம் ரூ.258-க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 58 ஆயிரத்துக்கும் விற்பனையானது. நேற்றும் வெள்ளி விலையில் மாற்றமின்றி ஒரு கிராம் ரூ.258-க்கும், ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 58 ஆயிரத்துக்கும் விற்பனையானது.

### தமிழ்நாட்டில் மீண்டும்

# இ.பி.எஸ். தலைமையில் அ.தி.மு.க. ஆட்சி அமையும்

### முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் நம்பிக்கை

**சென்னை, ஜன. 01-**

தமிழ்நாட்டில் மீண்டும் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆசியுடன் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க. ஆட்சி அமையும் என்று அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை கழக அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர்கள் கூட்டம் முடிந்த பிறகு முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

புத்தாண்டு பிறக்கும் நேரத்தில் பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற அடிப்படையில் மக்கள் வருகிற சட்டமன்ற தேர்தலில் நிச்சயம் தி.மு.க. ஆட்சியை வீட்டிற்கு அனுப்புவார்கள்.

போலியான வாக்குறுதிகளையும் பசப்பு வார்த்தைகளையும் தமிழக மக்கள் இனியும் நம்புவதற்கு தயாராக இல்லை. கள்ளச்சாராயம் குடித்து உயிரிழந்தபோதும் கள்ளக்குறிச்சிக்கு செல்லாத முதல்வர் இப்போது தேர்தலுக்காக அங்கு சென்று உள்ளார். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், செவிலியர்கள் என போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளனர். கடந்த 10 நாட்களுக்கும் மேலாக தமிழகமே போர்க்களமாக காட்சி அளித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அவர்களின் குரலெல்லாம் தமிழக அரசுக்கு கேட்கவில்லை.

செவிலியர்கள், ஆசிரியர்கள் போராட்டம் குறித்து முதல்வர் கவலைப்படாமலேயே இருந்து வருகிறார். ஆனால் தினந்தோறும் போட்டோ ஷூட் மட்டும் நடத்தி வருகிறார். தமிழ்நாட்டை சீரழிக்கும் ஆட்சி புதிய ஆண்டில் முடிவுக்கு வரும். மீண்டும் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆசியுடன் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க. ஆட்சி அமையும். தமிழ்நாடே தலை குனிகின்ற செயலாக திருத்தணியில் வடமாநில வாலிபர் மதுபோதையில் தாக்கப்பட்ட சம்பவம் நடைபெற்றுள்ளது.

வந்தாரை வாழவைக்கும் தமிழ்நாட்டில் இது போன்ற சம்பவம் நடந்திருப்பது அரசின் கையாலாகாத தனத்தை காட்டுகிறது. கொஞ்சம் கூட வெட்கமே இல்லாமல் தமிழ் நாட்டில் கஞ்சா இல்லை போதை பொருட்கள் புழக்கம் இல்லை என அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறி இருப்பது ஜமுக்காளத்தில் வடிகட்டிய பொய்யாகும். இவ்வாறு அவர் கூறினார்.

### இறுதிச்சடங்கில் ஜெய்சங்கர் பங்கேற்பு:

# பிரதமர் மோடியின் இரங்கல் கடிதம் கலீதா ஜியா மகனிடம் ஒப்படைப்பு

**டாக்கா, ஜன. 01-**

மறைந்த வங்கதேச முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவின் இறுதிச் சடங்கில் பங்கேற்க மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் நேற்று டாக்கா நகரத்துக்குச் சென்ற நிலையில் பிரதமர் மோடியின் கடிதத்தை அவரது மகனிடம் ஒப்படைத்தார்.



வங்கதேசத்தின் முதல் பெண் பிரதமரும், கொல்லப்பட்ட அதிபர் ஜியாவுர் ரஹ்மானின் மனைவியுமான கலீதா ஜியா, உடல் நலக் குறைவால் செவ்வாய்க்கிழமை (டிச. 30) காலை காலமானார். இதனைத் தொடர்ந்து, அவரது மறைவுக்கு பிரதமர் நரேந்திர மோடி உள்பட உலக நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், தலைநகர் டாக்காவில் நேற்று (டிச. 31) நடைபெறும் கலீதா ஜியாவின் இறுதிச் சடங்கில் பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். அந்த நிகழ்வில், இந்திய அரசின் சார்பில் மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் பங்கேற்றார். இதையடுத்து, வங்கதேச முன்னாள் பிரதமரின் மறைவுக்கு பிரதமர் மோடியின் இரங்கல் கடிதத்தை கலீதா ஜியாவின் மகன் தாரிக் ரஹ்மானிடம் அமைச்சர் ஜெய்சங்கர் ஒப்படைத்ததாக, வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, அமைச்சர் ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள எக்ஸ் தளப் பதிவில், முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவின் மறைவுக்கு மத்திய அரசு மற்றும் இந்திய மக்களின் சார்பாக ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நியூசிலாந்தில் புத்தாண்டு கொண்டாட்டம் கோலாகலம்

**வெலிங்டன், ஜன. 01-**

2024-ம் ஆண்டின் கடைசி நாளுக்கு விடை கொடுத்து, 2026 புத்தாண்டை வரவேற்க உலகம் முழுவதும் உள்ள மக்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர். பல்வேறு நாடுகளில் பட்டாசு மற்றும் இனிப்புகளுடன் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு புத்தாண்டை கொண்டாட்டத்துடன் வரவேற்க மக்கள் தயாராகி வருகின்றனர்.

இந்தியாவில் புத்தாண்டு பிறப்பதற்கு இன்னும் சில மணி நேரங்களே உள்ளன. புத்தாண்டை வரவேற்பதற்காக இந்தியா முழுவதும் பல்வேறு நகரங்களில் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் நியூசிலாந்தில் 2026 புத்தாண்டு பிறந்துள்ளது. நியூசிலாந்தில் உள்ள ஆக்லாந்து, வெலிங்டன் உள்ளிட்ட நகரங்களில் வாணவேடிக்கைகளுடன் புத்தாண்டு கொண்டாட்டம் களைகட்டியது. நியூசிலாந்தை தொடர்ந்து சமோவா, டோங்கா உள்ளிட்ட நாடுகளிலும் புத்தாண்டு பிறந்தது. கேக் வெட்டி ஆட்டம் பாட்டம் என புத்தாண்டை மக்கள் கொண்டாடி வருகின்றனர்.

# ஆபரேஷன் சிந்தூரின்போது சீனா மத்தியஸ்தம் செய்ததா?

### இந்தியா திட்டவட்டமாக மறுப்பு

**புதுடெல்லி, ஜன. 01-**

இந்தியா - பாகிஸ்தான் இடையே நடைபெற்ற சண்டையின் போது மத்தியஸ்தம் செய்ததாக டிரம்ப் கூறி வரும் நிலையில் தற்போது சீனாவும் இதே கருத்தை கூறியுள்ளதை இந்தியா திட்டவட்டமாக மறுத்துள்ளது. இந்தியா–பாகிஸ்தான் இடையிலான இருதரப்பு பிரச்சினைகளில் மூன்றாம் தரப்புக்கு எந்தப் பங்கும் இல்லை'' என்று இந்தியா தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் 22-ம் தேதி ஜம்மு–காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சுற்றுலாப் பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். இந்த தாக்குதலின் பின்னணியில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் இருப்பது தெரியவந்ததைத் தொடர்ந்து, பாகிஸ்தானில் இருந்த பயங்கரவாதிகளின் முகாம்கள் மீது இந்தியா தாக்குதல் நடத்தியது. 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் இந்தியா ராணுவ நடவடிக்கையை தொடங்கியது. பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்கள் குறிவைத்து தாக்கி அழிக்கப்பட்டன. இதில் ஏராளமான பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இதையடுத்து, இந்தியா மீது பாகிஸ்தான் ராணுவம் தாக்குதல் நடத்தியது. இந்தியா கொடுத்த பதிலடியில் அந்த நாட்டின் விமானப்படைத் தளம் கடுமையாக சேதமடைந்தது. இந்தியாவின் பதிலடி தீவிரமாக இருந்ததை அடுத்து, பாகிஸ்தான் ராணுவ நடவடிக்கைகளின் தலைமை இயக்குநர் (டிஜிஎம்ஓ), இந்திய டிஜிஎம்ஓவை தொடர்பு கொண்டு போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுகோள் விடுத்தார். இதை இந்தியா ஏற்றது. இதனைத் தொடர்ந்து போர் முடிவுக்கு வந்தது.

இந்தியா–பாகிஸ்தான் சண்டை நிறுத்தம் ஏற்பட்டதில் மூன்றாம் நாடுகளின் தலையீடு இல்லை என்று இந்தியா திட்டவட்டமாக கூறி வருகிறது. இருப்பினும், இந்தியா–பாகிஸ்தான் போரை தாம் தான் முடிவுக்குக் கொண்டு வந்ததாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தொடர்ந்து கூறி வருகிறார்.

இந்த நிலையில், இந்த விவகாரத்தில் குதித்துள்ள சீனா, 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையின் போது தாம் மத்தியஸ்தம் செய்ததாக கூறியுள்ளது. சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யி கூறியதாவது:-"இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு முன் எப்போதும் இல்லாத அளவில் இந்த ஆண்டு உள்ளூர் போர்களும் எல்லை தாண்டிய மோதல்களும் அடிக்கடி வெடித்துள்ளன. வடக்கு மியான்மர், ஈரான் அணுசக்திப் பிரச்சினை, இந்தியா–பாகிஸ்தான் இடையேயான பதற்றம், இஸ்ரேல்–பாலஸ்தீனம் பிரச்சினை, கம்போடியா–தாய்லாந்து பிரச்சினை ஆகியவற்றில் நாங்கள் மத்தியஸ்தம் செய்தோம்'' என்று அவர் கூறினார்.

சீனாவின் இந்தக் கருத்தை இந்தியா திட்டவட்டமாக மறுத்துள்ளது. "இது போன்ற கூற்றுகளை நாங்கள் ஏற்கனவே மறுத்துள்ளோம். இந்தியா–பாகிஸ்தான் இடையிலான இருதரப்பு பிரச்சினைகளில் மூன்றாம் தரப்புக்கு எந்தப் பங்கும் இல்லை'' என்று இந்தியா தெரிவித்துள்ளது.

### பிறந்தது 2026 புத்தாண்டு:

# சிறப்பு டூடுல் வெளியிட்ட கூகுள்

**புதுடெல்லி, ஜன. 01-**

2026ம் ஆண்டு ஆங்கில புத்தாண்டை வரவேற்கும் வகையில் கூகுள் சிறப்பு டூடுல் வெளியிட்டுள்ளது.





நடப்பு 2025ம் ஆண்டு நேற்றுடன் நிறைவு பெற்றது. நேற்றுதான், வார கடைசி நாள், மாத கடைசி நாள், வருடத்தின் கடைசி நாள் ஆகும். கூகுள் நிறுவனம் அவ்வப்போது பிரபல ஆளுமைகளின் பிறந்தநாள், பண்டிகை நாட்கள், முக்கிய தினங்கள் போன்ற நாட்களில் சிறப்பு டூடுலை வெளியிடுவது வழக்கம்.

அந்தவகையில், நேற்று இரவு 12 மணியுடன் 2025ம் ஆண்டு நிறைவடைந்து, நேற்று நள்ளிரவு 2026வது ஆங்கில புத்தாண்டு பிறக்க உள்ளது. 2026ம் ஆண்டு ஆங்கில புத்தாண்டை வரவேற்கும் வகையில் கூகுள் சிறப்பு டூடுல் வெளியிட்டுள்ளது. இந்தாண்டு நிறைவு பெற்று ஒரு புத்தம் புதிய ஆண்டு நெருங்கிக்கொண்டிருக்கிறது என்பதைப் பயனர்களுக்கு நினைவூட்டுகிறது. ஒரு அத்தியாயத்தின் முடிவையும் மற்றொரு அத்தியாயத்தின் தொடக்கத்தையும் குறிக்கிறது.

பண்டிகைக்காலங்களை குறிக்கும் வகையில், பலூன்கள், வண்ணக் காகிதத் துண்டுகள் உள்ளிட்டவற்றால் 2026 அலங்கரிக்கப்பட்டுள்ளது. கோடிக்கணக்கான மக்கள் தங்கள் நண்பர்கள், குடும்பத்தினருடன் கூடி, கடந்த ஆண்டைப் பற்றி சிந்தித்து, புதிய ஆண்டை வரவேற்கின்றனர். விரைவில், 2026ன் தொடக்கத்தை அதிகாரப்பூர்வமாகக் குறிக்கும் வகையில் நள்ளிரவு மணி அடிக்கும் என்பதை டூடுல் நினைவூட்டுகிறது.

**01-01-2026**



# இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** மனைவி, குழந்தைகள் மூலம் சிறிது மனக் கஷ்டங்கள் ஏற்படலாம். அதன் காரணமாக உடல் சோர்வுகள் உண்டாகும். மற்றவர்களுடன் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது.

**ரிஷபம்:-** பெற்றோர்களால் நன்மை பல பெறுவீர்கள். மணவாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக அமையும். புத்தாடை அணிகலன்கள் சேரும். விவசாயம் மூலம் லாபங்கள் இருக்கும். வாகன யோகம் உண்டு.

**மிதுனம்:-** சமாளிக்க முடியாத செலவுகள் ஏற்படும். நண்பர்களுடன் சுமுகமாக இருந்தால் கருத்து வேறுபாடுகளை தவிர்க்கலாம். தொழிலில் புதிய முதலீடுகளை தவிர்க்கவும்.

**கடகம்:-** ஆரோக்கிய நிலை சீராக இருக்கும். அனைத்து வழிகளிலும் தன வருமானம் பெருகும். மற்றவர்களுக்கு மனதார உதவும், சமூக சேவைக்கான எண்ணங்கள் மனதில் எழும். புகழ் ஓங்கும்.

**சிம்மம்:-** தொழிலில் அதிக இலாப வரவால் தனலாபம் பெருகும்., நல் ஆரோக்கியமும் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். இனிய பேச்சால் எல்லோரையும் கவர்வீர்கள்.

**கன்னி:-** தெய்வ பக்தியால் தெய்வீக சிந்தனைகள் ஈடுபாடு அதிகரிக்கும். சுகம், சந்தோஷம் ஏற்பட்டு உல்லாசமாகவே பயணிப்பீர்கள். குடும்ப வாழ்க்கையில் குதூகலம் நிலவும். புனித யாத்திரைகள் செல்ல நேரலாம்.

**துலாம்:-** வீட்டில் பொருட்களை பத்திரப்படுத்தி வைத்துக் கொள்வது நல்லது. அனுகூலமற்ற காலமாக இருப்பதால் வழக்கு விவகாரங்கள் ஒத்திப் போடுவது சிறப்பு. குடும்பத்தில் சில்லறைச் சண்டைகள் எழலாம்.

**விருச்சிகம்:-** காதல் உணர்வு தலை தூக்கும். அரசியல் மற்றும் பொது வாழ்க்கையில் ஆதாயம் அடையலாம். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். குழந்தைகளுக்கு அதிர்ஷ்டமான நாள்.

**தனுசு:-** தன வரவு கூடும். சொந்த வீடு வாங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்வீர்கள். நண்பர்களின் தொடர்பு நலத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்கும். இனிய பயணங்கள் எண்ணற்ற வெற்றிகளை அளிக்கும்.

**மகரம்:-** நண்பர்களால் கௌரவ குறைவு ஏற்படலாம். உயிரைக் கொடுத்து உழைத்தாலும் நல்ல பெயர் எடுக்க முடியாது. பிள்ளைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை கொள்ள வேண்டிய நாள்.

**கும்பம்:-** எதிர்பாராத மாற்றங்கள் ஏற்பட ஒருவித பய உணர்வு ஏற்படும். உடல் உபாதைகள் காரணமாக, உடலிலும், மனதிலும் ஒரு நிலையற்ற தன்மை நிலவும். மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி பெற கவனம் தேவை.

**மீனம்:-** எல்லா முயற்சிகளும் வெற்றி பெறும். வியாபாரப் பயணங்கள், நல்ல வாகன யோகம், நல்ல வருமானம், உறவுகளைச் சந்திப்பதில் மகிழ்ச்சி ஆகியவை ஏற்படும்.

### உலகிலேயே முதல் நாடாக

# கிரிபாட்டி தீவில் பிறந்தது புத்தாண்டு

**கிரிபாட்டி, ஜன. 01.**

உலகிலேயே முதல் நாடாக 2026-ஐ கிரிபாட்டி தீவு வரவேற்று கொண்டாடியது.

உலக மக்கள் அனைவரும் 2024 புத்தாண்டை வரவேற்க முழு உற்சாகத்துடன் தயாராகி வருகின்றனர். உலகம் முழுவதும் ஒரே தேதி முறை பயன்படுத்தப்பட்டாலும், புவியின் சுழற்சி காரணமாக உலக நாடுகளின் கால நிலை மற்றும் அங்குள்ள நேர முறை என்பது ஒவ்வொரு நாட்டின் இருப்பிடத்திற்கு ஏற்றவாறு மாறுபடும்.

அந்த வகையில் உலகிலேயே முதல் நாடாக 2026ஐ வரவேற்றது கிரிபாட்டி தீவு. உலகிலேயே முதல் நாடாக, பசிபிக் தீவு நாடான கிரிபாட்டி தீவில் 2026-ம் ஆண்டு பிறந்தது.

பூமிப்பந்தின் கிழக்கு கோடியில் உள்ள கிரிபாட்டி தீவில் பிறந்தது புத்தாண்டு, கிரிபாட்டி தீவின் கிரிட்டிமதி நகரம் 2026-ம் ஆண்டுக்குள் அடியெடுத்து வைத்துள்ளது.

இந்திய நேரப்படி நேற்று மாலை 3.38 மணிக்கு கிரிபாட்டி தீவில் 2026 புத்தாண்டு பிறந்ததையொட்டி, அந்நாட்டு மக்கள் புத்தாண்டை உற்சாகமாக வரவேற்றனர். அதைத் தொடர்ந்து நியூசிலாந்து, ஆஸ்திரேலியா நாடுகளில் அடுத்த சில மணி நேரங்களில் புத்தாண்டு பிறந்தது.

ஆஸ்திரேலியாவை தொடர்ந்து ஜப்பான், தென் கொரியா, வடகொரியா, சீனா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், வங்கதேசம் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள், இந்தியாவிற்கு முன்னதாக அடுத்தடுத்து புத்தாண்டை கொண்டாடின.

# உட்கட்சி விவகாரத்தில் கூட்டணி கட்சிகள் தலையிட வேண்டாம்

### மாணிக்கம்தாகூர் எம்.பி. கோரிக்கை

**சென்னை, ஜன. 01-**

காங்கிரஸ் உட்கட்சி விவகாரத்தில் தலையிட வேண்டாம் என்று மாணிக்கம் தாகூர் எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

அகில இந்திய காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய்யை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். இதைத் தொடர்ந்து காங்கிரஸ் நிர்வாகி பிரவீன் சக்கரவர்த்தி, விஜய்யை நேரில் சந்தித்து பேசினார். இது தமிழக அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. சமீபத்தில் உத்தரப்பிரதேசத்தை விட அதிக கடன் வாங்கும் மாநிலமாக தமிழ்நாடு இருப்பதாக பிரவீன் சக்ரவர்த்தி கருத்து தெரிவித்திருந்தார். அவரது கருத்துக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சி, ம.தி.மு.க. உள்ளிட்ட தி.மு.க. கூட்டணி கட்சிகள் கண்டனம் தெரிவித்திருந்தன.

இந்த நிலையில் காங்கிரஸ் கட்சியின் உட்கட்சி விவகாரத்தில் கூட்டணி கட்சிகள் தலையிட வேண்டாம் என்று வி.சி.க., ம.தி.மு.க. உள்ளிட்ட கூட்டணி கட்சிகளுக்கு காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூர் எச்சரிக்கை விடுத்துள்ளார். திருமாவளவன், வைகோ, சண்முகம், வீரபாண்டியன் ஆகிய தலைவர்களை குறிப்பிட்டு மாணிக்கம் தாகூர் பதிவிட்டுள்ளார். அந்த பதிவில் அவர் தெரிவித்திருப்பதாவது:-

வி.சி.க., ம.தி.மு.க., இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகள் காங்கிரஸ் கட்சியின் ஒரு நிர்வாகி மீது நடவடிக்கை எடுக்க இந்திய எதிர்கட்சி தலைவரிடம் கோரிய செய்தியை தனியார் நாளிதழில் படித்தேன். இது ஒரு அடிப்படை கேள்வியை எழுப்புகிறது:

காங்கிரஸ் தனது உள்கட்சி விஷயங்களை எப்படி நடத்த வேண்டும் என்று கூட்டணி கட்சிகள் உத்தரவிடத் தொடங்கியது எப்போது? தங்களது உள்கட்சி விஷயங்களில் இது போன்ற பொது கருத்துகளை இக்கட்சிகள் ஏற்றுக்கொள்வார்களா? தமிழ்நாடு காங்கிரஸ் தலைமை ரவிக்குமார் எம்.பி., துரை வைகோ, சண்முகம், வீரபாண்டியன் ஆகியோரிடம் "உங்கள் கட்சி உறுப்பினர்களை இப்படிச் சமாளியுங்கள்'' என்று சொன்னால், அவர்கள் அதை சகிப்பார்களா? கூட்டணிகள் பரஸ்பர மரியாதையின் அடிப்படையில் உருவாகின்றன - பொது அழுத்த அரசியலால் அல்ல. ஏதேனும் கருத்து வேறுபாடுகள் இருந்தால், அவை ஊடக அறிக்கைகள் மூலம் அல்ல; கூட்டணி மேடைகளுக்குள் பேசப்பட வேண்டும்.

ஒரு கூட்டணி கட்சியின் உள்கட்சி செயல்பாடுகளை பொது வெளியில் விமர்சிப்பது ஆபத்தான முன்னுதாரணத்தை உருவாக்குகிறது; இது பாஜக - ஆர்.எஸ்.எஸ் அமைப்புகளுக்கு எதிரான கூட்டு வலிமையையே பலவீனப்படுத்தும். இது கட்சி செயல் வீரர்கள் தன்மான உணர்வை தூண்டும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய தலைமைகள் தங்களது மாநில செயலாளர்களுக்கு குறைந்தபட்ச அரசியல் மரியாதையையும், கூட்டணி ஒழுக்கத்தையும் பேண அறிவுறுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## சட்டம் ஒழுங்கு விவகாரம்:
# தமிழக அரசுக்கு இ.பி.எஸ். கேள்வி



சென்னை, ஜன. 01-

போதைப் பொருளைக் கட்டுப்படுத்த முடிய வில்லை என்றால், சட்டம் ஒழுங்கைக் காக்க முடிய வில்லை என்றால், எதற்கு நீங்கள் ஆட்சியில் இருக்கி றீர்கள்? என்று எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப் பியுள்ளார்.

தமிழக மக்கள் உயிர் பயத்திலேயே வாழ வேண் டுமா? என்று முன்னாள் முதல்வரும், அதி.மு.க. பொதுச்செயலாளருமான எடப்பாடி பழனிசாமி தெரி வித்துள்ளார். இது தொடர் பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், திருத்தணி ரயில் நிலையத்தில் நின்றுக் கொண்டிருந்த ஒரு சாமானி யர் மீது 2 இளைஞர்கள் சர மாரியாக தாக்கியதாக செய் திகள் வருகின்றன.

அதேபோல், திருப்பூரில் போதை இளைஞர் ஒருவர், காவலரை கத்தியுடன் நடு ரோட்டில் விரட்டிய செய்தி யும் அதிர்ச்சி அளிக்கின் றன.

போதைப் பொருள் புழக்கமும், போதை இளை ஞர்களால் ஏற்படும் சட்டம் ஒழுங்கு சீர்கேடும் தினசரி செய்தியாகி இருப்பதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார் பொம்மை முதல்வர்? அடுத்த நொடி யார், எந்த போதையில் நம் மைத் தாக்கப் போகிறார் என்ற உயிர் பயத்திலேயே தமிழக மக்கள் வாழ வேண் டுமா?

தமிழ்நாட்டில் கஞ் சாவே இல்லை என்று வெட்கமே இன்றி கூறும் மாரத்தான் அமைச்சருக்கு, ஸ்டாலின் அரசு மருத்துவ மனையில் இருந்த 3 அடி கஞ்சா செடி தெரியவில் லையா? கடந்த ஒரு வாரத் தில் மட்டும், நாகப்பட்டி னத்தில் 140 கிலோ, இராம நாதபுரத்தில் 564 கிலோ, திருச்சியில் 4 கிலோ என தமிழகத்தில் பிடிபட்டுள்ள கஞ்சா குறித்த செய்திகள் எல்லாம் இந்த அமைச்ச ருக்கு தெரியாதா என்ன?

போதைப் பொருளைக் கட்டுப்படுத்த முடிய வில்லை என்றால், சட்டம் ஒழுங்கைக் காக்க முடிய வில்லை என்றால், எதற்கு நீங்கள் ஆட்சியில் இருக்கி றீர்கள்? நிர்வாகம் என்றால் என்னவென்றே தெரியாத திறனற்ற முதல்வரிடம் சிக் கித் தமிழ்நாடு தவித்தது போதும். 2026, விடியா ஆட் சியிடம் இருந்து தமிழகம் விடுதலை பெறும் ஆண் டாக அமையட்டும். மக்க ளைக் காப்போம் தமிழ கத்தை மீட்போம். என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

# நாமக்கல்லில் ஜனவரி 4-ல் அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம்

சென்னை, ஜன. 01-

தி.மு.க. அரசை கண்டித்து நாமக்கல்லில் 4-ம் தேதி அ.தி. மு.க. ஆர்ப்பாட்டம் நடத்துகிறது. அ.தி.மு.க. பொதுச்செயலா ளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

அ.தி.மு.க. ஆட்சியில் அறிவிக்கப்பட்ட, நாமக்கல் மாவட் டம், கபிலர்மலை ஒன்றியம், பிலிக்கல்பாளையம் முதல் கொடுமுடி வரை, காவிரி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைப்பதற்கான திட்டத்தை அரசியல் காழ்ப்புணர்ச் சியோடு கிடப்பில் போட்டு வைத்திருக்கும் விடியா தி.மு.க. ஸ்டாலின் மாடல் அரசைக் கண்டித்தும்; மக்கள் நலன் கருதி உயர்மட்டப் பாலம் அமைக்கும் திட்டத்தை உடனடியாக செயல்படுத்திட வலியுறுத்தியும்,

நாமக்கல் மாவட்ட அ.தி.மு.க. சார்பில் 4.1.2026 (ஞாயிற் றுக்கிழமை) காலை 10 மணியளவில், கபிலர்மலை ஒன்றியம், பிலிக்கல்பாளையம், மல்லிகாபுரம் பேருந்து நிறுத்தம் அரு கில், கழக அமைப்புச் செயலாளரும், நாமக்கல் மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி. தங்க மணி எம்.எல்.ஏ. தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெறும். இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த தலைமைக் கழகச் செயலா ளர், கழக சட்டமன்ற உறுப்பினர், கழக சார்பு அணிகளின் நிர் வாகிகள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் கள், மாவட்டத்தில் பல்வேறு நிலைகளில் பணியாற்றி வரும் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் இந்நாள், முன்னாள் பிரதிநிதிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் முன்னாள் பிர திநிதிகளும், கழக உடன்பிறப்புகளும் பெருந்திரளாகக் கலந் துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தி.மு.க. மாடல் ஸ்டாலின் அரசைக் கண்டித்து நடைபெற உள்ள இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில், பல்வேறு தரப் பட்ட தொழிலாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளான அளவில் கலந்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## சபரிமலை மகர ஜோதி தரிசனம்:
# 35 ஆயிரம் பக்தர்களுக்கு மட்டும் அனுமதி



சபரிமலை, ஜன. 01-

சபரிமலையில் மகரவி ளக்கு பூஜை யாத்திரைக்காக கோயில் நடை மீண்டும் திறக்கப்பட்டிருக்கும் நிலை யில், மகர ஜோதி அன்று 35,000 பக்தர்களுக்கு மட் டுமே அனுமதி அளிக்கப்பட வுள்ளதாக தகவல்கள் தெரி விக்கின்றன.

சபரிமலையில் மலை யாள மாதம் விருச்சிகத்தின் (கார்த்திகை) முதல் நாளான நவ. 17-ம் தேதி தொடங்கி 41 நாட்கள் நடைபெற்ற மண் டல பூஜை யாத்திரை கடந்த சனிக்கிழமையுடன் (டிச.27) நிறைவடைந்தது. அன்றைய தினம் இரவு 10 மணிக்கு 'ஹ ரிவராசனம்' பாடல் இசைக் கப்பட்டு, கோயில் நடை அடைக்கப்பட்டது. மண்டல பூஜை காலகட்டத்தில் மட் டும் சுமார் 36 லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். சுமார் ரூ. 332 கோடிக்கு மேல் காணிக்கை அளித்தனர்.

இந்த நிலையில், மகரவி ளக்கு பூஜைக்காக செவ் வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு கோயில் நடை மீண்டும் திறக்கப்பட்டது. நேற்று அதிகாலை முதல் பக் தர்கள் சாமி தரிசனத்துக்கு அனுமதிக்கப்பட்டு வருகின் றனர். மண்டல-மகரவிளக்கு யாத்திரை காலத்தின் முக்கிய நிகழ்வான மகரவிளக்கு பூஜை மற்றும் ஜோதி தரிச னம் வரும் ஜன.14-ம் தேதி நடைபெற உள்ளது.

வழக்கமாக நாளொன் றுக்கு 70,000 பக்தர்கள் வரை சபரிமலையில் தரிசனம் செய்ய அனுமதிக்கப்பட்டு வரும் சூழலில், மகர ஜோதி அன்று 35,000 பக்தர்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்க தேவஸ்தானம் முடிவு செய் துள்ளது. இதுதொடர்பான அதிகாரப்பூர்வ இன்னும் வெளியிடப்படவில்லை. மக ரவிளக்கு பூஜைக்குப் பிறகு பக்தர்கள் 19-ஆம் தேதி வரை சுவாமி தரிசனம் செய்யலாம். தொடர்ந்து, 20-ஆம் தேதி பந் தளம் அரச குடும்ப பிரதிநிதி யின் சிறப்பு தரிசனத்துக்குப் பின் கோயில் நடை அடைக் கப்படும்.

# கல்வி நிதி விடுவிப்பதை தவிர மற்ற எல்லாவற்றிலும் ஆர்வம்
## மத்திய அரசு மீது கனிமொழி விமர்சனம்



சென்னை, ஜன. 01-

தமிழ்நாட்டுப் பிள்ளைக ளுக்கு சேரவேண்டிய ரூ. 2,291 கோடி கல்வி நிதியை விடுவிப்பதைத் தவிர, தமிழ் நாட்டில் நடக்கும் மற்ற எல் லாவற்றிலும் மத்திய பா.ஜ.க. அரசு ஆர்வம் காட்டுகிறது என்று திருப்பரங்குன்றம் தீப விவகாரம் குறித்து மத்திய கல்வித் துறை அமைச்சர் தர் மேந்திர பிரதான் தெரிவித்த கருத்துக்கு தி.மு.க. பாராளு மன்றக் குழுத் தலைவர் கனி மொழி பதிலளித்துள்ளார்.

மதுரை மீனாட்சி அம் மன் கோவிலில் நேற்று காலை தரிசனம் செய்த தர் மேந்திர பிரதான், திருப்பரங் குன்றம் விவகாரத்தில் தமி ழக அரசை விமர்சித்துப் பேசியிருந்தார். செய்தியாளர் களுடன் பேசிய தர்மேந்திர பிரதான் கூறியதாவது:- திருப் பரங்குன்றம் மலை உச்சியில் தமிழ் மக்களும் ஹிந்துக்க ளும் தீபம் ஏற்றலாம் என்று நீதிபதி அளித்துள்ள தீர்ப்பை நிறைவேற்றாதது முட்டாள் தனம். இந்த விவகாரத்தை அரசியல் ரீதியில் தமிழக அரசு கையாள்வது கண்டிக் கத்தக்கது. திருப்பரங்குன்றம் மலை மீது தீபமேற்றுவதைத் தடுக்க நினைப்பவர்களை சிவன் பார்த்துக் கொள்வார்." எனத் தெரிவித்தார்.

இந்த செய்தியை எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ள கனி மொழி, "தமிழ்நாட்டுப் பிள் ளைகளுக்கு சேரவேண்டிய ரூ. 2,291 கோடி கல்வி நிதியை விடுவிப்பதைத் தவி ர, தமிழ்நாட்டில் நடக்கும் மற்ற எல்லாவற்றிலும் மத் திய பா.ஜ.க. அரசு ஆர்வம் காட்டுகிறது." எனக் காட்ட மாக தெரிவித்துள்ளார்.

# வங்கிகளுக்கு 2026 ஜனவரியில் மட்டும் 14 நாட்கள் விடுமுறை



சென்னை, ஜன. 01-

2026-ம் ஆண்டு ஜனவரி யில் மட்டும் தமிழகத்தில் வங்கிகளுக்கு 14 நாட்கள் விடுமுறை வருகிறது.

2026-ஆம் ஆண்டு புத் தாண்டாக வியாழக்கிழமை பிறக்கிறது. இந்த ஜனவரி மாதத்தில் வங்கிகளுக்கு எத் தனை நாள்கள் விடுமுறை என்ற தகவல்கள் வெளியாகி யுள்ளன. அதாவது, இரண்டா வது மற்றும் நான்காவது சனிக்கிழமை, அனைத்து ஞாயிற்றுக் கிழமைகளும் சேர்த்து எந்தெந்த பண்டி கைகளுக்கு எந்தெந்த வங்கி கள் விடுமுறை என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இங்கு வெளியாகும் தக வல் நாடு முழுவதும் உள்ள அனைத்து வங்கிகளுக்குமா னது அல்ல, ஒவ்வொரு மாநி லத்துக்கம் ஏற்ப இது மாறுப டும் என கூறப்பட்டுள்ளது. ஜன. 1 : புத்தாண்டு (பெரும் பாலான மாநிலங்களில்). ஜன. 2: மன்னம் ஜெயந்தி (ஐஸ்வால், கொச்சி, திருவ னந்தபுரம் வங்கிகள்). ஜன. 12 : சுவாமி விவேகானந்தர் ஜெயந்தி (மேற்கு வங்கத்தில் விடுமுறை). ஜன. 14 : மகர சங்க்ராந்தி (மகாராஷ்டிரம், ஒடிசா, குஜராத், அசாம், அரு ணாசலம் மாநிலங்களில் விடுமுறை). ஜன. 15 : பொங் கல் பண்டிகை (தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரம், தெலங் கானா, சிக்கிம். ஜன. 16 : திரு வள்ளுவர் தினம் (தமிழகத் தில் விடுமுறை). ஜன. 17 : உழவர் திருநாள் (தமிழகத் தில் விடுமுறை). ஜன. 23 : வசந்த பஞ்சமி (ஒடிசா, மேற் குவங்கம், திரிபுரா). ஜன. 26: குடியரசு நாள் (நாடு முழுவ தும் அரசு விடுமுறை),

இதுதவிர ஜன. 10 : இரண்டாவது சனிக்கிழமை (நாடு முழுவதும்), ஜன. 24 : நான்காவது சனிக்கிழமை (நாடு முழுவதும்), ஜன. 4, 11, 18, 25 ஆகிய நான்கு ஞாயிற் றுக்கிழமைகளும் விடுமு றை, நான்காவது சனிக்கி ழமை ஜன. 31 வங்கிகள் செயல்படும்.

வங்கிப் பணிகளை பெரும்பாலும் ஆன்லைன் வங்கிச் சேவை மூலமே நடத் திக்கொள்ள முடியும் என்ப தால் வங்கிகள் விடுமுறை என்றாலும் வங்கிப் பணிகள் பாதிக்கப்படாது என்றே கூற லாம். மேலும், இந்த தகவல் கள் பொதுவானவை என்ப தால், அவரவர் கணக்கு வைத்திருக்கும் வங்கிக் கிளைகளை அணுகி இது பற்றி உறுதி செய்து கொள் வது நல்லது.

## 6-வது நாளாக தொடர் போராட்டம்:
# 1,583 இடைநிலை ஆசிரியர்கள் மீது 3 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு

சென்னை, ஜன. 01-

சென்னை, நுங்கம்பாக் கத்தில் உள்ள பள்ளிக் கல் வித்துறை இயக்குநரகத்தை முற்றுகையிட்டு இடை நிலை ஆசிரியர்கள் நேற்று 6-வது நாளாக தொடர் போராட்டம் நடத்தினர். போராட்டம் தொடர்பாக 1,583 ஆசிரியர்கள் மீது எழும் பூர் காவல்துறையினர் 3 பிரி வுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

அரசு பள்ளிகளில் பணி யாற்றக்கூடிய இடைநிலை ஆசிரியர்கள் சம வேலைக்கு சம ஊதியம் கோரி கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். அந்த வகையில் அரையாண்டு தேர்வு விடுமுறையை கணக் கில் கொண்டு, அவர்கள் போராட்டத்தை முன்னெடுத் துள்ளனர். அதன்படி, கடந்த 26-ந் தேதியில் இருந்து சென் னையில் பல்வேறு இடங்க ளில் தொடர்ந்து போராட்டத் தில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று முன்தினம் சென்னை எழும்பூர் அருகே உள்ள வட் டாரக் கல்வி அலுவலகம் முன்பு அவர்கள் போராட்டத் தில் ஈடுபட்டனர். போராட் டத்தில் ஈடுபட்ட 1,500 ஆசி ரியர்களை போலீசார் கைது செய்தனர். பின்னர், அவர்கள் மாலையில் விடுவிக்கப்பட் டனர். இந்த நிலையில் 6-வது நாளாக நேற்று சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள பள்ளிக் கல்வித்துறை இயக் குநரகத்தை முற்றுகையிட்டு இடைநிலை ஆசிரியர்கள் போராட்டம் நடத்தி வருகின் றனர். கடந்த தேர்லில் திமுக கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்று முழக்கமிட்டு ஆசிரி யர்கள் போராடி வருகின்ற னர். இதனால் அந்த பகுதி யில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

போராட்டத்தைக் கட் டுப்படுத்த போலீசார் குவிக் கப்பட்டிருந்தனர். இதற்கி டையே சென்னை எழும்பூ ரில் நேற்று முன்தினம் போராட்டத்தில் ஈடுபட்ட இடைநிலை ஆசிரியர்கள் மீது போலீசார் வழக்குப்ப திவு செய்துள்ளனர்.

1,583 ஆசிரியர்கள் மீது எழும்பூர் காவல்துறையினர் அனுமதியின்றி கூடுதல், அமைதிக்கு குந்தகம் விளை வித்தல் உள்ளிட்ட 3 பிரிவுக ளின் கீழ் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

## 2026-ன் முதல் ஜல்லிக்கட்டுப்போட்டி:
# புதுக்கோட்டை, தச்சங்குறிச்சியில் ஜனவரி 3-ம் தேதி நடைபெறுகிறது

புதுக்கோட்டை, ஜன. 01-

புதுக்கோட்டை மாவட் டத்தில் வருகிற 3-ம் தேதி ஜலலிக்கட்டு போட்டி தொடங்க உள்ளதாக அரசாணை வெளியிடப்பட் டுள்ளது.

2026-ம் ஆண்டுக்கான முதல் ஜல்லிக்கட்டுப் போட்டி புதுக்கோட்டை மாவட்டம் தச்சங்குறிச்சியில் ஜனவரி 3 ஆம் தேதி நடை பெறும் என்று தமிழ்நாடு அரசு அரசாணை வெளி யிட்டு தெரிவித்துள்ளது. கந் தர்வகோட்டை ஒன்றியம், தச்சன்குறிச்சி கிராமத்தில் ஆண்டுதோறும் தமிழகத் தின் முதல் ஜல்லிக்கட்டு விழா நடைபெறுவது வழக் கம். இந்த நிலையில், வரும் ஜனவரி 3 ஆம் தேதி தச்சங்கு றிச்சியில் தமிழகத்தின் முதல் ஜல்லிக்கட்டு விழா நடை பெறுகிறது. ஜல்லிக்கட்டு உள்ளிட்ட போட்டிகளை நடத்துவதற்கான விண்ணப் பங்கள் அனைத்தும் இணை யவழியில் மட்டுமே அனுப் பப்பட வேண்டும். விண் ணப்பிக்கும்போதே காப் பீட்டு ஆவணங்களைச் சமர்ப்பிக்கும்படி விண்ணப் பதார்களிடம் அறிவுறுத்த வேண்டும். ஜல்லிக்கட்டுக்கு தொடர்பு இல்லாத இடங்க ளில் அத்தகைய போட்டிகள் நடத்தக் கோரி சமர்ப்பிக்கப் படும் விண்ணப்பங்களைப் பரிசீலிக்கக் கூடாது என்று ஜல்லிக்கட்டு வழிகாட்டு நெறிமுறைகளில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

அலங்காநல்லூர், பால மேடு, அவனியாபுரம் என்று மதுரை மாவட்டத்தில் புகழ் பெற்ற ஜல்லிக்கட்டு நடை பெறும் இடங்கள் இருந்தா லும், தமிழகத்தின் முதல் ஜல்லிக்கட்டுப் போட்டி புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டையை அடுத்துள்ள தச்சங்குறிச்சி யில் இருந்துதான் தொடங்கு கிறது. இதேபோல் தமிழகத்திலேயே அதிக வாடிவாசல் கொண்ட மாவட்டமாக புதுக் கோட்டை விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# த.வெ.க.வுடன் காங்கிரஸ் கூட்டணியா? காங்கிரஸ் தலைவர் ப.சிதம்பரம் பதில்




காரைக்குடி, ஜன. 01-

காரைக்குடியில் முன் னாள் மத்திய நிதி அமைச்சர் பா.சிதம்பரம் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:- பிப்ரவரி மாதமே தமிழக சட் டமன்ற தேர்தல் குறித்த அறி விப்பு வர வாய்ப்பு உள்ளது. மார்ச் இறுதி அல்லது ஏப்ரல் தொடக்கத்தில் தமிழக சட்ட மன்ற தேர்தல் நடக்கலாம். நல்ல தேர்தல் அனுபவம் உள்ள இண்டியா கூட்ட ணியே வெல்லும். ஆட்சி யில் பங்கு, கூட்டணி ஆட்சி குறித்து தி.மு.க., காங்கிரஸ் தலைவர்கள் சேர்ந்து எடுக்க வேண்டிய முடிவு.

தி.மு.க. உடன் காங்கிரஸ் குழுவினர் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை நடத்துவார் கள். எத்தனை தொகுதிகள் என்பதை தி.மு.க. - காங்கி ரஸ் தலைமை தான் முடிவு செய்யும்.சில அறிவுஜீவிகள் உத்தரபிரதேசத்துடன் தமிழ கத்தை ஒப்பிடுவது சரியல்ல. மெத்தப்படித்தவர்களுடன் விவாதிக்க நான் விரும்ப வில்லை.

தேர்தலுக்கு முன் காரைக் குடியில் வேளாண் பல்கலை, சட்டக்கல்லூரி திறக்கப்ப டும். இந்தியாவிலேயே தமி ழகம்தான் வளர்ச்சியில் முத லிடம் என நிதி ஆயோக் கூறுகிறது. இவ்வாறு அவர் கூறினார். மேலும் விஜய் உடன் காங்கிரஸ் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்துமா என்ற கேள்விக்கு பா.சிதம்ப ரம் தெரிவிக்கையில், விஜய்க்கு வாழ்த்துகள், அவ ரது முயற்சி வெற்றி பெறாது என்றார்.

# கரூர் சம்பவம் தொடர்பாக விஜய்யிடம் விசாரணை நடத்த சி.பி.ஐ. திட்டமா...?
## த.வெ.க. நிர்வாகி நிர்மல் குமார் விளக்கம்



புதுடெல்லி, ஜன. 01-

கரூர் வழக்கு தொடர் பாக விஜய்யிடம் விரைவில் விசாரணை நடத்த சி.பி.ஐ. திட்டமிட்டுள்ளதாக சி.டி. ஆர். நிர்மல் குமார் கூறியுள் ளார்.

கரூர் வழக்கு தொடர் பான இறுதிக்கட்ட விசார ணையின் போது விஜய்க்கு சம்மன் அனுப்ப சி.பி.ஐ. திட் டமிட்டுள்ளதாக கூறப்படுகி றது. ஜனவரி மாதத்தில் விஜய்க்கு சம்மன் அனுப்பி, அவரிடம் விசாரணை நடத்த சி.பி.ஐ. திட்டமிட்டுள்ளதாக வும் சி.பி.ஐ. வட்டார தகவல் கள் தெரிவிக்கின்றன. எனி னும் இது தொடர்பாக நேர டியாக பதிலளிக்க த.வெ.க. நிர்வாகிகள் மறுப்பு தெரி வித்துள்ளனர்.

பின்னர் செய்தியாளர்களி டம் பேட்டி அளித்த சி.டி. ஆர். நிர்மல் குமாரிடம் இது குறித்து கேள்வி எழுப்பப் பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "நிறைய தகவல்கள் பரவி வருகின்றன. யூகங்க ளின் அடிப்படையில் நான் பதில் சொல்ல விரும்ப வில்லை. எதுவாக இருந்தா லும் நாங்கள் சட்டப்பூர்வ மாக பதிலளிப்போம்" என்றார்.

## கரூர் வழக்கு தொடர்பாக
# த.வெ.க. நிர்வாகிகளிடம் 3-வது நாளாக நீடித்த சி.பி.ஐ. விசாரணை

புதுடெல்லி, ஜன. 01-

கரூர் வழக்கு தொடர் பாக த.வெ.க. நிர்வாகிகளி டம் நேற்று 3 -வது நாளாக சி.பி.ஐ. அதிகாரிகள் விசா ரணை நடத்தினர்.

கரூரில் த.வெ.க. தலை வர் விஜய் பிரசாரத்தின் போது கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் பலியான சம்ப வம் குறித்து சி.பி.ஐ. விசா ரித்து வருகிறது. இதற்கிடை யில், பொதுச்செயலாளர் புஸ்சி ஆனந்த், ஆதவ் அர்ஜு னா, சி.டி.நிர்மல்குமார், கரூர் மாவட்டச் செயலாளர் மதிய ழகன் ஆகியோர் டெல்லி யில் உள்ள சி.பி.ஐ. அலுவல கத்தில் நேரில் ஆஜராகுமாறு அவர்களுக்கு சி.பி.ஐ. சம்மன் அனுப்பியிருந்தது.

அதன்படி, த.வெ.க. நிர் வாகிகள் புஸ்சி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா மற்றும் நிர் மல் குமார் உள்ளிட்டோர் டெல்லியில் உள்ள சி.பி.ஐ. தலைமை அலுவலகத்தில் கடந்த 3 தினங்களுக்கு முன்பு ஆஜரானார்கள். இதைப்போல கரூர் மாவட்ட கலெக்டர், போலீஸ் சூப்பிரண்டு உள் ளிட்ட 6 அதிகாரிகளும் அழைக்கப்பட்டு இருந்தனர். இவர்களிடம் 9 மணி நேரம் தொடர்ச்சியாக விசாரணை நடத்தப்பட்டது.

இதனைத்தொடர்ந்து 2-வது நாளாக நேற்று முன்தி னம் விசாரணை நடத்தப்பட் டது. காலை 11 மணி அள வில் சி.பி.ஐ. அலுவலகம் வந்த அவர்களிடம் 11:30 மணி அளவில் விசாரணை தொடங்கியது. இந்த விசா ரணை மதியம் உணவு இடை வேளைக்குப் பிறகும் தொடர்ந்து மாலை வரை நீண்டது. விசாரணை முடிந்து அவர்கள் மாலை 6:45 மணி அளவில் வெளியே வந்தனர். நேற்று முன்தினம் மட்டும் அவர்களிடம் 7 மணி நேரம் விசாரணை நடத்தப்பட்டுள் ளது.

இந்த நிலையில் கரூர் கூட்ட நெரிசல் வழக்கின் விசாரணைக்காக சி.பி.ஐ. அலுவலகத்தில் 3-வது நாளாக நேற்றும் த.வெ.க. நிர் வாகிகள் என். ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, நிர்மல்குமார் உள் ளிட்டோர் ஆஜராகினர். அவர்களிடம் சி.பி.ஐ. அதி காரி சுனில்குமார் தலைமை யிலான குழுவினர் விசா ரணை நடத்தினர்.

# ஆந்திர மக்களுக்கு புத்தாண்டு பரிசாக ஒருநாள் முன்னதாகவே ஓய்வூதியம்
## முதல்வர் சந்திரபாபு அறிவிப்பு

அமராவதி, ஜன. 01-


புத்தாண்டு பரிசாக ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள முதி யோர்களுக்கு ஒருநாள் முன்னதாகவே ஓய்வூதியம் விநியோ கித்து வருவதாக அந்த மாநில முதல்வர் என்.சந்திரபாபு நாயுடு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், மாநி லம் முழுவதும் உள்ள லட்சக்கணக்கான பயனாளிகளுக்குப் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவிக்கும் வகையிலும், அவர் களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் வகையிலும் ஜனவரி 1-ஆம் தேதிக்குப் பதிலாக டிசம்பர் 31-ஆம் தேதியே ஓய்வூதி யங்கள் வழங்கப்படுவதாக அவர் கூறினார்.

புத்தாண்டை முன்னிட்டு மாநில அரசின் என்டிஆர் பரோசா சமூக ஓய்வூதியங்களை ஒருநாள் முன்னதாகவே விநி யோகித்து வருகிறது. டிசம்பர் மாதத்திற்காக சுமார் 63 லட்சம் பயனாளிகளுக்கு ஓய்வூதியம் வழங்க மாநில அரசு ரூ. 2,700 கோடிக்கு மேல் நிதி விடுவித்துள்ளது.

மேலும், தனது அரசு அமைக்கப்பட்டதிலிருந்து ஓய்வூதி யங்களுக்காக ரூ. 50,000 கோடிக்கு மேல் செலவிட்டுள்ளதாக வும் அவர் குறிப்பிட்டார். ஓய்வூதிய விநியோகம் ஏழைக ளுக்கு நிதிப் பாதுகாப்பை அளிக்கிறது, இது அரசுக்கு மிகுந்த மனநிறைவைத் தருகிறது. வீடு தேடிச் சென்று ஓய்வூதியம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் நிறைவடைந்துவிட்டதாக அவர் தெரிவித்தார். இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



நடப்பாண்டில் ஒவ்வொரு குடும்பத் திற்கும் வழங்கப்படும் கரும்புகளின் எண் ணிக்கையை இரண்டாக உயர்த்த வேண் டும்; கரும்புக்கான கொள்முதல் விலையை ரூ.50 ஆக உயர்த்தி, இடைத்தரகர்கள் இல் லாமல் அரசே நேரடியாக கரும்புகளை கொள்முதல் செய்து, உழவர்களுக்கு நன்மை கிடைக்க வகை செய்ய வேண்டும்.

- அன்புமணி



திருத்தணியில் வடநாட்டு இளைஞரை நான்கு இளைஞர்கள் ஓடும் ரெயிலில் அரி வாள் காட்டி மிரட்டி ரீல்ஸ் எடுத்து. அந்த இளைஞர் மீது கொடூர தாக்குதல் நடத்தி யது கடும் கண்டனத்திற்குரிய செயல். சமூக சீர்கேட்டு குற்றத்தின் அடிப்படையான போதை பொருள் ஊடுறுவலை முற்றிலும் ஒழித்திட அரசு போர்க்கால அடிப்படை யில் செயல்பட வேண்டும்.

- சரத்குமார்



காங்கிரஸ் உள்கட்சி பிரச்சினையை பெரிது படுத்த வேண்டாம். எங்கள் கட்சி யில் என்ன பிரச்சினையோ அதனை நாங் கள் பேசி தீர்த்துக்கொள்வோம். தமிழக அரசுக்கு எதிராகவோ, பா.ஜ.க.வுக்கு ஆத ரவாகவோ யாராவது பேசினால் அந்த புகாரை எங்கள் தலைமையிடம் தெரிவிப் போம். நடவடிக்கை எடுப்பார்கள் என நாங்கள் முழுமையாக நம்புகிறோம்.

- செல்வப்பெருந்தகை



ஒடிசா தொழிலாளர் ஒருவரைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கி 'ரீல்ஸ்' என்னும் பெயரில் காட்சிப் பதி வாகச் சமூக ஊடகங்களில் வெளியிட் டுள்ளது தமிழ்நாட்டுக்குத் தலைகு னிவை ஏற்படுத்தியுள்ளது. புலம்பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறு திப்படுத்திடவும் அரசு உரிய நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும்.

- திருமாவளவன்

# திருவொற்றியூர் ஆகாஷ் மருத்துவமனையில் சிறப்பு மருத்துவ முகாம்



**திருவொற்றியூர், ஜன.01**

திருவொற்றியூர் ஆழ்வார் பேட்டை மீஞ்சூர் பகுதிகளில் ஆகா~; மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. டாக்டர் ஏ.செல்வராஜகுமார், டாக்டர் ப்ரியா லட்சுமணன் நிர்வாக இயக்குனர்களாக இருந்து இந்த மருத்துவமனை நடத்தி வருகின்றனர். சர்வதேச தரத்தில் சிறப்பான மருத்துவ சேவை அளித்து வருகின்றனர். அதநவீன கருவிகள் மற்றும் சிறப்பு மருத்துவர்கள் நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வெற்றிகரமாக நோயாளிகளை நல்லபடியாக வீட்டிற்கு அனுப்பி வருகின்றனர். இங்கு 24 மணி நேரமும் அனைத்து நோய்களுக்கும் சிகிச்சை அளித்து வருகின்றனர்.

பல் மருத்துவம் கண் மருத்துவம் போன்வற்றிற்கும் சிகிச்சைகள் அளித்து வருகின்றனர். டாக்டர் செல்வராஜ் குமார் தலைமையில் மூல நோய், ஆசன வாய் வெடிப்பு, பவித்திரம், பைலோனிடல், சைனஸ், குடலிறக்கம், பித்தப்பை கற்கள், குடல்வால் நோய்கள். விரைவீக்கம், தைராய்டு கட்டிகள், மார்பக கட்டிகள், புற்றுநோய் கட்டிகள், கருப்பை கட்டி வயிறு குடல் சம்பந்தமான பிரச்சனைகள் குறித்து முகாம்கள் நடைபெற்றது. இந்த முகாமில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

டாக்டர் பிரியா லட்சுமணன் தலைமையில் குழந்தை பேர் இல்லாதவர்களுக்கு பரிசோதனை மேற்கொண்டு அதற்கான சிகிச்சையும் செய்வது குறித்து ஆலோசனையும் முகாமும் நடைபெற்றது.



**சர்வதேச கூட்டுறவு ஆண்டின் நிறைவு நாளை முன்னிட்டு சென்னையில் மெரினாவில் நடைபெற்ற தூய்மைப்பணி கூட்டுறவு பட்டயப்பயிற்சியாளர்கள் மூலம் நடைபெற்றது.**

# சென்னை பெரம்பூர், சந்திரயோகி சமாதி சாலையில் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் பிரம்மாண்டமான திருமண மண்டபம் இந்த மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்

**சென்னை,ஜன.01**

சென்னை திரு.வி.க. நகர் தொகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் நடைபெற்றுவரும் புரசைவாக்கம், கான்ரான் ஸ்மித் சாலையில் உள்ள நவீன சலவைக் கூடம் கட்டுமானப் பணிகளையும், பட்டாளம், பக்தவச்சலம் பூங்கா "முதல்வர் படைப்பகம்" கட்டுமானப் பணிகளையும், புளியந்தோப்பு, பழைய ஆடுதொட்டியை வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பெருநகர மாநகராட்சி மற்றும் சி.எம்.டி.ஏ. சார்பில் மேம்படுத்தப்பட்டுவரும் "நவீன ஆடு தொட்டி" கட்டுமானப் பணிகளையும், கன்னிகாபுரம் விளையாட்டு மைதானத்தின் கட்டுமானப் பணிகளையும் மற்றும் புளியந்தோப்பு, வெங்கடேசபுரம் புதிய காலனியில் உள்ள "முதல்வர் படைப்பகம்" கட்டுமானப் பணிகளையும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமானபி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்து, அனைத்து பணிகளையும் விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரவேண்டுமென அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரரை அறிவுறுத்தினார்.

இந்து சமய அறநிலைத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும் போது தெரிவித்ததாவது:சென்னை மாநகராட்சி சார்பில் 15 "முதல்வர் படைப் பகம்" மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பில் 24 "முதல்வர் படைப்பகம்" என்று திட்டங்கள் உருவாக்கப்பட்டு அதனுடைய கட்டுமான பணிகள் வேகமாக நடந்து வருகின்றது. அந்த பணிகளை தினந்தோறும் ஆய்வு செய்து அந்தந்த பணிகள் நிறைவுறுகின்ற நிலத்தை நிர்ணயம் செய்து அதற்கேற்றார் போல் ஆட்களும் அரசு சார்பில் இருக்கின்ற பல்வேறு துறைகள் சார்ந்த மின்சார வாரியம், குடிநீர் வழங்கற்று வாரியம், அதேபோல் பெருநகர சென்னை மாநகராட்சி இதுபோன்று அந்த பணிகளுக்கு உதவியாக இருக்கின்ற துறைகளையும் ஒருங்கிணைந்து ஆய்வினை மேற்கொண்டு வருகின்றோம். அந்த வகையில் திருவிக நகர் சட்டமன்ற தொகுதியில் இன்றைக்கு 6 இடங்களில் ஆய்வினை மேற்கொண்டிருக்கின்றோம்.

சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பில் பெரம்பூர், சந்திரயோகி சமாதி தெருவில் கட்டப்பட்டு வருகின்ற திருமண மண்டபத்தை 2026 ஜனவரி மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது என்று திட்டமிட்டு இருக்கின்றோம்.

திரு.வி.க. நகர் பகுதியில் அமைந்துள்ள கன்னிகாபுரம் விளையாட்டு திடல் 2026 பிப்ரவரி மாதம் 10ஆம் தேதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளோம். இதே போல் கான்ரான் ஸ்மித் சாலையிலுள்ள சலவை கூடத்தையும் நவீன மயமாக்கி,



துணிகளை துவைக்கும் நவீன இயந்திரத்தோடு அமைத்து கொடுக்க திட்டமிட்டுள்ளோம், அனைத்து பணிகளும் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் வருகின்ற 2026 பிப்ரவரி மாதம் இரண்டாவது வாரத்திற்குள் கான்ரான் ஸ்மித் சாலையிலுள்ள சலவை கூடம் திறந்து வைக்க திட்டமிடப்பட்டுள்ளோம். தேர்தல் அறிவிப்புக்கு முன்பு குறைந்தபட்சம் 60 திட்டங்களையாவது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர திட்டமிட்டு பணியாற்றி வருகிறோம் என்றார். சென்னை மாநகராட்சி மேயர்ஆர்.பிரியா செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது திரு.வி.க. நகர் தொகுதியிலுள்ள புளியந்தோப்பு பகுதியில் 100 ஆண்டுகளுக்கு மேல் ஆடுதொட்டி செயல்பாட்டில் உள்ளது. வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் சார்பில் ரூபாய் 45 கோடி மதிப்பீட்டில் "நவீன ஆடுதொட்டி" கட்டப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2026 பிப்ரவரி மாதம் இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். ஆடு இறைச்சிக்கு மட்டும் 40 கடைகள், கிட்டத்தட்ட ஒவ்வொரு கடையும் 1400 சதுர அடியில் உள்ளது. மாடு இறைச்சிக்காக 18 கடைகள் கட்டப்பட்டு வருகிறது. இந்த பகுதியில் இருக்கக்கூடிய பொதுமக்களுக்கு இறைச்சிக் கழிவுகள் மூலம் பிரச்சனை ஏற்படக் கூடாது என்பதற்காக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் ஏற்பாடு செய்யப்படவுள்ளது. இவ்வாறு மேயர்.ஆர்.பிரியா தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது மேயர்.ஆர்.பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர்தாயகம் கவி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர்.கோ.பிரகாஷ், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர்.எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத்தலைவர்.சரிதா மகேஷ்குமார், சிஎம்டிஏ மாவட்ட வருவாய் அலுவலர்கள்மு.இந்துமதி, டாக்டர் பால் பிரின்ஸ்லி ராஜ்குமார், திருமதி.பர்கத் பேகம், கண்காணிப்பு பொறியாளர் திரு.ராஜன்பாபு, மாமன்ற உறுப்பினர்கள்.தமிழ்செல்வி, சுமதி, சரவணன், உள்ளாட்சி பிரதிநிதிகள்சாமிகண்ணு, தமிழ்வேந்தன் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# யானை கவுனி பகுதியில் பெண்ணிடம் தங்க நகைகளை திருடிய வெளிமாநில பெண் டெல்லியில் கைது

**சென்னை ஜன 01-**

சென்னை, ஆவடி, கோயில்பதாகை பகுதியில் வசித்து வரும் அசோக்குமார், என்பவர் கடந்த 10.ந் தேதி அன்று அவரது தாய் கேளம்மாள் உட்பட குடும்பத்தினருடன் சேர்ந்து யானைகவுனி பகுதியில் உள்ள ஜீவல்லரி கடையில் சுமார் 69 கிராம் தங்க நகைகளை வாங்கிவிட்டு, குடும்பத்தினருடன் சேர்ந்து அருகில் சௌகார்பேட்டை, பெருமாள் முதலி தெருவில் உள்ள சிற்றுண்டி உணவகத்தில் சாப்பிட்டு கொண்டிருந்த போது, கூட்ட நெரிசலை பயன்படுத்தி மேற்படி அசோக்குமாரின் தாய் கேளம்மாள் கையில் வைத்திருந்த பையை பிளேடு மூலம் அறுத்து 69 கிராம் தங்க நகைகள் அடங்கிய பாக்ஸை யாரோ திருடிச்சென்றது தெரியவந்தது. இது குறித்து அசோக்குமார் யானைகவுனி காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

மேற்படி வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகளை விரைந்து கைது செய்ய சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், உத்தரவின் பேரில், உயரதிகாரிகளின் ஆலோசனையின்படி யானை கவுனி காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவயிடத்திற்கு சென்று தீவிர விசாரணை செய்து, சம்பவயிடத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமரா பதிவுகளை பார்த்ததில் 2 பெண்கள் மேற்படி அசோக்குமார் குடும்பத்தினரை பின் தொடர்ந்து சென்று, கேளம்மாளிடம் தங்க நகைகள் அடங்கிய பாக்ஸை திருடிச்சென்றது தெரியவந்தது. அதன் பேரில் போலீசார் மேற்படி பெண்களை ஆட்டோவில் ஏற்றி சென்ற ஆட்டோ ஓட்டுநரை கண்டுப்பிடித்து விசாரணை செய்ததில், ஆட்டோவில் ஏறிய 2 பெண்களில் ஒருவர் ஆட்டோ ஓட்டுநரிடம் செல்போனை வாங்கி அவரது கணவரிடம் பேசியது தெரியவந்தது. அந்த செல்போன் நம்பர் குறித்து நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் விசாரணை செய்ததில் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட பெண் டெல்லியில் பதுங்கியிருப்பது தெரியவந்தது.

அதன்பேரில் தனிப்படை போலீசார் டெல்லிக்கு விரைந்து சென்று தீவிர தேடுதல் வேட்டை நடத்தி உள்ளூர் காவலர்கள் உதவியுடன் மேற்படி திருட்டு வழக்கில் தொடர்புடைய எதிரி அக்ஷிதா சிசோடியா, என்பவரை டெல்லியில் வைத்து 26.ந் தேதி அன்று கைது செய்து விசாரணை செய்ததில் அக்ஷிதா சிசோடியா அவரது மாமியாருடன் சேர்ந்து மேற்படி திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டு இரயில் மூலம் தப்பிச்சென்றது ம், திருடிய தங்க நகைகளை மத்திய பிரதேசத்தில் உள்ள சொந்த வீட்டில் பதுக்கி வைத்திருப்பது தெரியவரவே, அக்ஷிதா சிசோடியாடிவை டெல்லி நீதிமன்றத்தில் ஆஜர் செய்து டிரான்சிட் வாரண்ட் பெற்று தனிப்படை போலீசார் மத்திய பிரதேசம் மாநிலம், போடா பகுதிக்கு சென்று அங்குள்ள உள்ளூர் காவலர்கள் உதவியுடன் மேற்படி புகார்தாரரிடமிருந்து திருடப்பட்ட 69 கிராம் எடை கொண்ட தங்க நகைகளை மீட்டு, பணம் ரூ.4,250 ஐ பறிமுதல் செய்து, எதிரியை சென்னைக்கு அழைத்து வந்தனர்.

மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி அக்ஷிதா சிசோடியா மீது ஏற்கனவே மும்பை பகுதியில் திருடிய குற்றத்திற்காக 1 குற்ற வழக்கு வழக்கு உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி அக்ஷிதா சிசோடியா விசாரணைக்குப்பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர். இந்த சம்பவத்தில் தொடர்புடைய மற்றொரு தலைமறைவு எதிரியை பிடிக்க காவல்குழுவினர் தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

# பேசின்பாலம் பகுதியில் சட்ட விரோதமாக குட்கா புகையிலை பாக்கெட்டுகள் விற்பனை: 3பேர் கைது

**சென்னை ஜன 01-**

சென்னை பேசின்பாலம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் நேற்று முன் தினம் காலை, கே.பி பார்க், "ஜி" பிளாக் அருகில் உள்ள விளையாட்டு மைதானம் அருகே கண்காணித்து, அங்கு சட்டவிரோதமாக ஹான்ஸ் மற்றும் மாவா பாக்கெட்டுகளை மறைத்து வைத்து விற்பனை செய்து கொண்டிருந்த புளியந்தோப்பு பகுதியைச் சேர்ந்த 1.அருண், 2.விஜயபாபு, 3.நவீன், ஆகியோரை கைது செய்து, அவர்களிடமிருந்து மொத்தம் 1 கிலோ எடை கொண்ட ஹான்ஸ் பாக்கெட்டுகள், 610 கிராம் எடை கொண்ட மாவா பாக்கெட்டுகள் மற்றும் 1 கத்தி ஆகியவை பறிமுதல் செய்தனர்.

பின்னர் மேற்படி சம்பவம் குறித்து P-4 பேசின் பாலம் காவல் நிலையத்தில் குட்கா மற்றும் ஆயுதம் வைத்திருந்த உள்ளிட்ட சட்டப்பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

விசாரணையில் எதிரிகள் ஆந்திரா மாநிலத்தில் இருந்து ஹான்ஸ் மற்றும் மாவா பாக்கெட்டுகளை வாங்கி வந்து விற்பனை செய்து வந்தது தெரியவந்தது. மேலும் விசாரணையில் எதிரி அருண் மற்றும் விஜயபாபு ஆகிய இருவரும் சரித்திர பதிவேடு குற்றவாளிகள் என்பதும், எதிரிகள் அருண் மீது ஏற்கனவே 1 கொலை, 2 கொலைமுயற்சி, கஞ்சா உட்பட 14 குற்ற வழக்குகளும், விஜயபாபு மீது 1 கொலைமுயற்சி, கஞ்சா, குட்கா, வழிப்பறி உட்பட 13 குற்ற வழக்குகளும், நவீன் மீது குட்கா, அடிதடி என 2 குற்ற வழக்குகளும் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரிகள் மூவரும், விசாரணைக் குப் பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

# போதை மாத்திரைகள் உள்ளிட்ட போதைப்பொருட்கள் விற்ற இருவர் கைது

**சென்னை ஜன 01-**

சென்னைசைதாப்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் ஒருங்கிணைந்து நேற்று முன் தினம் மதியம், சைதாப்பேட்டை இரயில் நிலையம் அருகேயுள்ள தேரடி தெருவில் கண்காணித்தபோது, அங்கு சந்தேகப்படும்படி 2 இருசக்கர வாகனங்களுடன் நின்றிருந்த இருவரிடம் விசாரணை செய்து, சோதனை செய்தபோது, அவர்கள் எக்.எஸ்.டி. ஸ்டாம்ப்கள், கஞ்சா, போதை மாத்திரைகள் உள்ளிட்ட போதைப்பொருட்கள் சட்டவிரோத விற்பனைக்காக மறைத்து வைத்திருந்தது தெரியவந்தது. அதன்பேரில், சட்டவிரோதமாக போதைப்பொருட்கள் வைத்திருந்தது தொடர்பாக சைதாப்பேட்டை காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து, எதிரிகள் 1.பிரபாகரன், 2.ஹரிசுதன், ஆகிய இருவரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 50 எல்.எஸ்.டி. ஸ்டாம்ப்கள், 9 எம்.டி. எம்.ஏ. மாத்திரைகள். 50 கிராம் கஞ்சா, 1 கஞ்சா பேஸ்ட் 2 செல்போன்கள் மற்றும் 2 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டது. விசாரணைக்குப் பின்னர் கைது செய்யப்பட்ட 2 எதிரிகளும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

# சென்னையில் பல்வேறு வழக்கில் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 4 பேர் கைது

**.சென்னை ஜன 01-**

அரும்பாக்கம் காவல் நிலையத்தில் தாக்கலான போதைப்பொருள் வழக்கில் தொடர்புடைய எதிரிகள் மதன்குமார் (எ) மதன், மற்றும் சலீம் பாஷா (எ) சலீம், ஆகிய இருவரை கைது செய்து, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்ற பிணையில் வெளியே சென்ற எதிரிகள் இருவரும், உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள போதைப்பொருள் வழக்கு சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு தொடர்ந்து ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த காரணத்தினால் எதிரிகள் மதன்குமார் மற்றும் சலீம் பாஷா ஆகியோரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய கடந்த 30.07.2025 அன்று நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. அரும்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட எதிரிகள் மதன்குமார் மற்றும் சலீம் பாஷா ஆகிய இருவரை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டு, நீதிமன்ற பிடியாணை நிறைவேற்றப்பட்டது.

மேலும் பேசின்பாலம் காவல் நிலையத்தில் 2023ம் ஆண்டு தாக்கலான அத்துமீறி நுழைந்து தாக்கியது தொடர்பான வழக்கின் எதிரி சாரதி கொரட்டூர், சென்னை என்பவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்ற பிணையில் வெளியே சென்ற பின்னர் எழும்பூர், 10வது பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு முறையாக ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த காரணத்தினால், எதிரி சாரதியை கைது செய்து, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நீதிமன்றம் 03.11.2025 அன்று பிடியாணை பிறப்பித்தது. பேசின் பாலம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் பல்வேறு இடங்களில் தேடி நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட எதிரி சாரதி, என்பவரை கைது செய்தனர்.கைது செய்யப்பட்ட எதிரி சாரதி விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.இதே போல் சென்னை எம்.கே.பி. நகர் காவல் நிலையத்தில் தாக்கலான குற்ற வழக்கில் எதிரி அபிஷேக். என்பவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்ற பிணையில் வெளியே சென்ற அபிஷேக் சென்னை, எழும்பூர் தலைமை பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு தொடர்ந்து ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த காரணத்தினால் எதிரி அபிஷேக் என்பவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய கடந்த 01.09.2025 அன்று நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.

எம்.கே.பி. நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட எதிரி அபிஷேக், என்பவரை கைது செய்து விசாரணை செய்தனர். கைது செய்யப்பட்ட எதிரி அபிஷேக் எம்.கே.பி. நகர் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி ஆவார். கைது செய்யப்பட்ட எதிரி அபிஷேக் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டு, நீதிமன்ற பிடியாணை நிறைவேற்றப்பட்டது.

# வாழ்வின் நலம் ததும்பும் நல்ல ஆண்டாக புத்தாண்டு தொடங்கட்டும்: இந்திய நாடார்கள் பேரமைப்பு வாழ்த்து

**சென்னை ஜன 01-**

வளம் நிரம்பிய ஆண்டாகவும் வாழ்வின் நலம் ததும்பும் நல்ல ஆண்டாகவும் புத்தாண்டு தொடங்கட்டும் - ராகம் சௌந்தரபாண்டியன் கூறியுள்ளார் .

இந்திய நாடார்கள் பேரமைப்பு நிறுவன தலைவர் ராகம் மா.சௌந்தரபாண்டியன் வெளியிட்டுள்ள புத்தாண்டு வாழ்த்து செய்தியில் கூறியிருப்பாதாவது:-அனைவருக்கும் இனிய ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துக்களை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். வருகின்ற புத்தாண்டு வளம் நிரம்பிய ஆண்டாகவும்,வாழ்வின் நலம் தரும் நல்ல ஆண்டாகவும் தொடங்கட்டும் என வாழ்த்துகிறேன்.இந்த புத்தாண்டில் புதிய நம்பிக்கையோடு கூடிய உத்வேகம் பிறக்கட்டும்,நம்பிக்கைதான் மனிதனின் மிகப்பெரிய மூலதனம், கடந்த காலங்களில் நாம் கடந்து வந்த பாதைகளில் இருந்து தடங்கல்கள்,இன்னல்கள்,துன்பங்கள் அனைத்தும் முடியட்டும்.குறிப்பாக நமது நாட்டில் நிலவு வரும் வருந்தத்தக்க அனைத்து பிரச்சனைகளும் ஒழியட்டும். வலிமாயமான எதிர்காலம் பிறக்கட்டும்.

**வாழ்த்து**

2026 ஆம் ஆண்டு வெற்றிகள்,வளம்,செல்வம்,சந்தோசம் ஆகியவற்றை கொண்டு வரட்டும்.வாழ்க்கையில் எதிர்கால வளர்ச்சி,உயர்வுகள்,புதிய வாய்ப்புகள் அனைத்தும் கிடைக்கட்டும்.உங்கள் குடும்பம் ஒற்றுமையுடன் இருக்கட்டும்,உறவுகள் உற்சாகமாக வளரட்டும்,நண்பர்கள் உறவினர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் வாழட்டும். உலகமெங்கும் வாழும் நமது சான்றோர் இன சொந்தங்கள் அனைவரும் உழைப்பால் புதிய சாதனைகளை படைத்து ,புதிய வெற்றிகளை பெற்று வழிமறிக்கும் தடைகளை எல்லாம் தகர்த்து வளமான வாழ்க்கை வாழ்ந்திட நினைத்தது அனைத்தும் நிறைவேறி மேம்பட்டு திகழ இப்புத்தாண்டில் அனைவரையும் இறைவன் அருளட்டும் என வாழ்த்துகிறேன் என்று கூறியுள்ளார்.

# மருந்துக்கடையின் பூட்டை உடைத்து, பணம் மற்றும் செல்போன் திருடிய வாலிபர் கைது

**சென்னை ஜன 01-**

சென்னை, மாதவரத்தைச் சேர்ந்த குருபாலாஜி, என்பவர் பழையவண்ணாரப்பேட்டை, 3வது லேன் பகுதியில் மருந்து கடை நடத்தி வருகிறார்.

**வாலிபர் கைது**

கடந்த 27. ந் தேதி அன்று இரவு, குருபாலஜியின் கடையில் வேலை பார்க்கும் உறவினர் நீதிஷ்குமார் என்பவர் மருந்து கடையை பூட்டிவிட்டு, மறுநாள் காலை வந்து பார்த்தபோது, கடையின் பூட்டு உடைக்கப்பட்டு, கடையின் உள்ளே வைத்திருந்த பணம் ரூ.5,ஆயிரம் மற்றும் 1 செல்போன் திருடு போனது தெரியவந்தது. இதுகுறித்து மருந்துக்கடை உரிமையாளர் குருபாலாஜி, H-1 வண்ணாரப்பேட்டை காவல் நிலையகுற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து, விசாரணை மேற்கொண்டனர்.

வ ண் ணா ர ப் பே ட் டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி அஜித், என்பவரை கைது செய்தனர்.

அவரிடமிருந்து பணம் ரூ.950ஐ பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் விசாரணையில் எதிரி அஜித் அவரது நண்பர்களுடன் சேர்ந்து மேற்படி கடையின் பூட்டை உடைத்து பணம் மற்றும் செல்போனை திருடியதும், இவர் மீது கொலை முயற்சி, திருட்டு வழக்கு உட்பட 8 குற்றவழக்கு உள்ளதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி அஜித் விசாரணைக்குப்பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டார்.மேற்படி குற்றச் சம்பவத்தில் ஈடுபட்ட தலைமறைவு குற்றவாளிகளை காவல் குழுவினர் தீவிரமாக தேடி வருகின்றனர்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# அயனாவரம் - பெரம்பூர் இடையே மெட்ரோ ரயில் சுரங்கம் தோண்டும் பணி நிறைவு

**சென்னை ஜன 01-**

சென்னை அயனாவரம் – பெரம்பூர் இடையே மெட்ரோ ரயிலுக்கான சுரங்கம் தோண்டும் பணி நிறைவு பெற்றது. 861 மீட்டர் தொலைவிலான பணியை வெற்றிகரமாக முடித்தது

**நிறைவு**

மேலகிரி' என்ற இயந்திரம். இரண்டாம் கட்டத் திட்டத்தில் இதுவரை மொத்தம் 19 சுரங்கம் தோண்டும் பணிகள் வெற்றிகரமாக நிறைவு பெற்றுள்ளன.

# வாரிசு சான்றிதழ் வழங்க லஞ்சம் பெற்ற வழக்கில் கைதான வருவாய் ஆய்வாளருக்கு 4 ஆண்டுகள் சிறை

**சென்னை ஜன 01-**

கடந்த 2014ம் ஆண்டு சென்னை தண்டையார்பேட்டை தாலுகா அலுவலகத்தில் வாரிசு சான்றிதழ் வழங்க ரூ.30,000 லஞ்சம் பெற்ற வழக்கில் கைதான, வருவாய் ஆய்வாளர் ஹரிஹரனுக்கு 4 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து லஞ்ச ஒழிப்பு சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. சிறை தண்டனையுடன் ரூ.4000 அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

கண், ரத்த தானம் செய்வீர்



ஈரோடு திமுக மாவட்ட துணைச்செயலாளர் செந்தில்குமார் தனது 60 வது பிறந்தநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

## பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து 71 கன அடியாக குறைந்தது

**ஈரோடு, ஜன 1 -**

ஈரோடு , கரூர், திருப்பூர் மாவட்ட மக்களின் குடிநீர் ஆதாரமாகவும், 2.47 லட்சம் விளை நிலங்களின் வாழ்வாதாரமாகவும் உள்ளது பவானிசாகர் அணை. 105 அடி கொள்ளளவு கொண்டபவானிசாகர் அணையின் முக்கிய நீர் பிடிப்பு பகுதியாக நீலகிரி மலைப்பகுதி இருந்து வருகிறது. கடந்த சில நாட்களாக பவானிசாகர் அணைக்கு நீர் வரத்து குறைந்து வருவதால் அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது. இன்று காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 97.48 அடியாக குறைந்துள்ளது. நேற்று காலை அணைக்கு வரும் நீர்மட்டம் 71 கனஅடியாக சரிந்தது. கீழ்பவானி வாய்க்கால் பாசனத்திற்கு அணையில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. தடப்பள்ளி - அரக்கன் கோட்டை பாசனத்திற்கு 700 கன அடியும், பவானி ஆற்றுக்கு 100 கன அடியும் திறக்கப்பட்டுள்ளது. மொத்தம் பவானிசாகர் அணையில் இருந்து பாசனத்திற்காக 800 கன அடி நீர் திறந்து விடப்பட்டு வருகிறது. குண்டேரி பள்ளம் அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி அணையின் முழு கொள்ளளவான 41.75 அடியில் தொடர்ந்து நீடித்து வருகிறது. எட்டியது. பெரும்பள்ளம் அணையின் நீர்மட்டம் இன்று காலை நிலவரப்படி 30.48 அடியாக உள்ளது. வரட்டு பள்ளம் அணையின் நீர்மட்டம் 28.67 அடியாக உள்ளது.

## தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி ஊட்டி வருகை: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்

**ஊட்டி, ஜன.01-**

தமிழக கவர்னர் ஆர்.என் ரவி 5 நாள் பயணமாக நேற்று ஊட்டி வந்தார். கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

நீலகிரி மாவட்டம் ஊட்டியில் உள்ள மக்கள் மாளிகை எனப்படும் ராஜ்பவன் மாளிகையில் கடந்த ஏப்ரல் மாதம் 25, 26 ஆகிய இரண்டு நாட்கள் பல்கலைக் கழக துணைவேந்தர்கள் மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டிற்கு தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தலைமை தாங்கி உயர் கல்வி குறித்து பேசினார். இந்த சுற்றுப்பயணம் முடிந்ததும் சென்னை திரும்பிய அவர் இந்த மாத தொடக்கத்தில் ஊட்டி வருவதாக இருந்தது.

இந்தநிலையில் அந்தப் பயணம் திடீரென்று நிர்வாக காரணங்களுக்காக தள்ளி வைக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி 5 நாள் சுற்றுப்பயணமாக



நேற்று நீலகிரிக்கு வருகை புரிந்தார். ராமேஸ்வரத்தில் நிகழ்ச்சியை முடித்துவிட்டு அங்கிருந்து கோவை வந்து, கோவையில் இருந்து சாலை மார்க்கமாக வருகை புரிந்த ஆளுநர் மேட்டுபாளையம் வன கல்லூரியில் சிறிது ஓய்வெடுத்து பின் காலை 10 மணிக்கு மக்கள் மாளிகைக்கு வந்தடைந்தார். அப்போது கலெக்டர் லட்சுமி பவ்யா, போலீஸ் சூப்பிரண்டு நிஷா ஆகியோர் பூங்கொத்து கொடுத்து கவர்னரை வரவேற்றனர். இதன் பின்னர் நேற்று மக்கள் மாளிகையில் ஓய்வெடுத்தார்.

இதைத்தொடர்ந்து ஆளுநர் ஆர்.என்.ரவி இங்குள்ள ஒரு சில இடங்களுக்கு குடும்பத்தினருடன் செல்ல உள்ளதாக கூறப்படுகிறது.

இதன் பின்னர் 02-ந் தேதி அதிகாலை சுமார் 5 மணி அளவில் இங்கிருந்து புறப்பட்டு கார் மூலமாக கோவை சென்று அங்கிருந்து விமானம் மூலம் சென்னை சென்று அங்கு நடக்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, அதன் பின்னர் மீண்டும் 3-ம் தேதி ஊட்டி மக்கள் மாளிகைக்கு வருகிறார். 4-ந் தேதி சுற்றுப்பயணம் முடிந்து மீண்டும் இங்கிருந்து கோவை சென்று அங்கிருந்து விமானம் மூலம் சென்னை செல்கிறார். ஆளுநர் வருகையையொட்டி நீலகிரியில் 500-க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு உள்ளனர். மேலும் பல்வேறு இடங்களில் வாகன சோதனையும் நடைபெற்றது.

ஈரோடு கணபதிபாளையத்தில்

## நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட மருத்துவ முகாமினை ஆய்வு மேற்கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்

### கலெக்டர் ச.கந்தசாமி வழங்கினார்

**ஈரோடு,ஜன.01-**

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், கணபதி பாளையம், அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு திட்ட மருத்துவ முகாமினை கலெக்டர் ச.கந்தசாமி ஆய்வு மேற்கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாம் 02.08.2025 அன்று துவக்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் இத்திட்டத்தினால் எண்ணற்ற பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர்.

அதன்படி, ஈரோடு மாவட்டத்தில் 27 மற்றும் 28-வது மருத்துவ முகாம் இன்று 31.12.2025 மொடக்குறிச்சி வட்டம், கணபதிபாளையம், அரசு மேல்நிலைப் பள்ளியிலும், பவானிசாகர், நல்லூர், எஸ்.ஆர்.சி. மேல்நிலைப்பள்ளியிலும் நடைபெற்றது. இம்மருத்துவ முகாம்களில் 34 சிறப்பு மருத்துவர்கள் மற்றும் 20 மருத்துவர்கள் என மொத்தம் 54 மருத்துவர்கள் கலந்து கொண்டு சிகிச்சை அளித்தார்கள்.



இம்முகாம்களில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் கண் பரிசோதனை, பல் சிகிச்சை, ரத்தப்பரிசோதனை, ECG, X-RAY பரிசோதனைகளும் கூடுதலாக பெண்களுக்கு கர்ப்பபைவாய் புற்றுநோய், மார்பக புற்றுநோய் பரிசோதனைகளும் செய்யப்பட்டது.

மருத்துவர்கள் பரிசோதனை செய்து தேவையான மருந்து மாத்திரைகள் வழங்கி, மேல் சிகிச்சை தேவைப்படுவோருக்கு சிறப்பு மருத்துவர்களை கொண்டு பரிசோதனை செய்து ECHO போன்ற உயர் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டு. உயர் சிகிச்சை தேவைப்படுவோர் பரிந்துரை செய்யப்பட்டார்கள்.

ஈரோடு மாவட்டத்தில் இதுவரை 26 மருத்துவ முகாம்கள் நடைபெற்றுள்ளது. இந்த முகாம்களில் 34,654 பயனாளிகளுக்கு மருத்துவ பரிசோதனை மற்றும் உயர் சிறப்பு சிகிச்சை வழங்கப்பட்டது.

19,975 நபர்களுக்கும் ECG-ம், 22,914 நபர்களுக்கும் ஆய்வக பரிசோதனையும் 2,297 நபர்களுக்கும் X-RAYம், 2,115 நபர்களுக்கும் Scan-ம், 2,603 நபர்களுக்கும் ECHO-ம், முதலமைச்சரின் காப்பீட்டுத் திட்ட அடையாள அட்டை 740 நபர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம், கலெக்டர் மொடக்குறிச்சி வட்டம், கணபதிபாளையம், அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை நேரில் பார்வையிட்டு 20 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களும், 5 காசநோயாளிகளுக்கு ஊட்டச்சத்து மாவு மற்றும் மருந்து பெட்டகங்களும், 5 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை, 7 நபர்களுக்கு மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்துப் பெட்டகங்களும் என 37 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இம்முகாமில், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கேரளாவில் இருந்து கோழி மற்றும் கோழி தீவனங்கள் ஏற்றி வரும் வாகனங்களுக்கு தடை

### கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு உத்தரவு

**ஊட்டி, ஜன. 01-**

கேரளாவில் பறவை காய்ச்சல் பரவி வரும் நிலையில் கேரளாவில் இருந்து கோழி மற்றும் கோழி தீவனங்கள் ஏற்றி வரும் வாகனங்கள் நீலகிரிக்குள் நுழைய மறு உத்தரவு வரும் வரை தடை விதித்து நீலகிரி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு உத்தரவிட்டுள்ளார்.

கேரளாவில் ஆலப்புழா, கோட்டயம் உள்ளிட்ட இடங்களில் பறவை காய்ச்சல் பரவல் அதிகமாக இருப்பதால், தமிழகத்தில் பரவாமல் இருக்க கேரளாவையொட்டி உள்ள மாவட்டங்களான நீலகிரி, கோவை உள்ளிட்ட மாவட்டங்களில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டு உள்ளது. எனவே நீலகிரி மாவட்டம் கூடலூர், பந்தலூர் தாலுகாக்களில் கேரள மாநில எல்லையில் அமைந்துள்ள சோதனைச்சாவடிகளில் கால்நடை பராமரிப்பு மண்டல இணை இயக்குனர் டாக்டர் வி.பாலகிருஷ்ணன் உத்தரவின் பேரில் கால்நடைத்துறையினர் முகாமிட்டு கண்காணித்து வருகின்றனர். அங்கிருந்து கோழி, கோழி தீவனங்கள், முட்டை போன்றவற்றை ஏற்றி வரும் வாகனங்கள் நீலகிரிக்குள் வர தடை விதித்து மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டு உள்ளது. இது குறித்து மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா கூறியதாவது:-

பறவை காய்ச்சல் காரணமாககேரள மாநிலத்திலிருந்து கோழியினங்கள், முட்டைகள், கோழியின எச்சம் மற்றும் கோழி தீவனங்கள் வாகனங்களில் ஏற்றி வர தற்காலிகமாக கடை விதிக்கப்படுகிறது. கேரள எல்லையோரம் அமைந்துள்ள 7 சோதனை தடுப்புச் சாவடிகள் மற்றும் கர்நாடகா மாநில எல்லையோரம் அமைந்துள்ள ஒரு சோதனை சாவடி ஆகிய 8 இடங்களில் தலா ஒரு கால்நடை உதவி மருத்துவர் தலைமையில், ஒரு கால்நடை ஆய்வாளர் மற்றும் ஒரு கால்நடை பராமரிப்பு உதவியாளர் கொண்ட குழு காவல்துறை, வனத்துறை மற்றும் வருவாய்துறையுடன் இணைந்து பறவைக் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பறவைக் காய்ச்சல் நோய் கோழி, வாத்து, வான்கோழி மற்றும் வனப்பறவைகளைத் தாக்கும், மனிதரையும் தாக்க வல்லது. நோய் தாக்கிய வெளிநாடுகளில் இருந்து இங்கு வரும் வனப்பறவைகள் மூலம் இந்த நோய் நீலகிரி மாவட்டத்திலும் நுழைய வாய்ப்பு உள்ளது.

பறவைக் காய்ச்சல் நோய் பரவாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பண்ணையாளர்கள் தவறாது கடைபிடிக்க வேண்டும். வனப்பறவைகள் பண்ணைக்குள் நுழையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கோழி, வாத்து, வான்கோழி, முதலிய பல்வேறு இனப் பறவைகளை ஒரே பண்ணையில் வைத்து வளர்க்கக்கூடாது. வெளியாட்கள், வெளி வாகனங்கள், விலங்குகள் பண்ணைக்குள் நுழைய அனுமதிக்கக் கூடாது. இதரப் பண்ணை உபகரணங்களை பகிர்ந்து கொள்ளக் கூடாது.

பண்ணை உபகரணங்களை மாதம் இருமுறை கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். கோழி பண்ணையில் அசாதாரண இறப்புகள் இருந்தால் உடனடியாக அருகில் உள்ள கால்நடை உதவி மருத்துவருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## திம்பம் மலைப்பாதையில் படுத்திருந்த சிறுத்தை: வாகன ஓட்டிகள் அதிர்ச்சி

**தாளவாடி, ஜன.1 -**

ஈரோடு மாவட்டம் திம்பம் மலைப்பாதை தமிழகம் -கர்நாடகாவை இணைக்கும் மிக முக்கிய போக்குவரத்து பகுதியாக இருந்து வருகிறது. 27 கொண்டை ஊசி வளைவுகளை கொண்ட திம்பம் மலைப்பாதையில் நூற்றுக்கணக்கான வாகனங்கள் வாகனங்கள் சென்று வருகின்றன. திம்பம் மலை பாதையில் யானை சிறுத்தை நடமாட்டம் இருந்து வருகிறது. இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு திம்பம் மலை பாதையில் சாலையோரம் உள்ள தடுப்பு சுவரில் சிறுத்தை ஒன்று படுத்து இருந்தது. அப்போது அந்த வழியாக சென்ற வாகன ஓட்டி ஒருவர் சிறுத்தை தடுப்பு சுவரில் படுத்திருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்து வாகனத்தை சற்று தொலைவில் நிறுத்தினார்.

பின்னர் அந்த வாகன ஓட்டி சிறுத்தையை தனது செல்போனில் வீடியோவாக பதிவு செய்தார். பின்னர் சிறிது நேரத்தில் மீண்டும் சிறுத்தை வனப்பகுதிக்குள் சென்றது. சிறுத்தை தடுப்பு சுவரில் படுத்திருக்கும் வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலானது. திம்பம் மலைப்பாதை வழியாக இரவு நேரம் செல்லும் வாகன ஓட்டிகள் கவனத்துடன் செல்ல வேண்டும். குறிப்பாக இருசக்கர வாகனத்தில் செல்பவர்கள் எக்காரணம் கொண்டும் வனப்பகுதியில் தங்களது வாகனங்களை நிறுத்த வேண்டாம் என வனத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
Old No:5, New No: 9, kannan Street, Korukkupet, Chennai - 600021.
Ph: 044-25952015,9842165236
E-Mail: chennaiedi@thinaboomi.com
RNI.Regn No.55306/93
Editor:MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

ஈரோடு மாவட்டத்தில்

## 4 வட்டார போக்குவரத்து அலுவலகங்களில் நவம்பரில் புதிதாக 3,760 வாகனங்கள் பதிவு

**ஈரோடு, ஜன.1-**

மோட்டார் வாகன சட்டத்தின்படி, புதிதாக வாங்கும் ஒவ்வொரு வாகனத்தையும், வட்டார போக்குவரத்து அலுவலகங்களில் கட்டாயம் பதிவு செய்யவேண்டும். வாகனங்களை பதிவு செய்ய ஆன்லைன் மூலம் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும். ஆன்லைன் விண்ணப்பத்திற்கு பிறகு, தேவையான ஆவணங்களுடன் தகுந்த கட்டணங்கள் மற்றும் வரியுடன் வாகனத்தை பதிவு செய்யும் வட்டார போக்குவரத்து அதிகாரி மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். புதிய வாகனத்தை ஆய்வு செய்த பின்னர் மோட்டார் வாகன சட்டப்படி வாகனத்திற்கு பதிவு எண் வழங்குவார்கள்.

ஈரோடு மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்யப்படும் வாகனங்களுக்கு டி.என்-86, ஈரோடு கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்யப்படும் வாகனங்களுக்கு டி.என்-33, பெருந்துறை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்யப்படும் வாகனங்களுக்கு டி.என்-56, கோபிசெட்டி பாளையம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்யப்படும் வாகனங்களுக்கு டி.என்-36 என்ற எண்களுடன் பதிவு எண் வழங்கப்படுகிறது. இது குறித்து வட்டார போக்குவரத்து அலுவலர்கள் கூறியதாவது: -ஈரோடு மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருசக்கர வாகனங்கள் 639-ம், நான்கு சக்கர வாகனங்கள் 82-ம், ஈரோடு கிழக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருசக்கர வாகனங்கள் 1,089-ம், நான்கு சக்கர வாகனங்கள் 240-ம் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதே போன்று, பெருந்துறை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருசக்கர வாகனங்கள் 835-ம், நான்கு சக்கர வாகனங்கள் 173-ம், கோபிசெட்டிபாளையம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருசக்கர வாகனங்கள் 605-ம், நான்கு சக்கர வாகனங்கள் 97-ம் புதிதாக வாங்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. ஈரோடு மாவட்டத்தில் உள்ள 4 வட்டார போக்குவரத்து அலுவலகங்களிலும் இருசக்கர வாகனங்கள் 3 ஆயிரத்து 168-ம், நான்கு சக்கர வாகனங்கள் 592-ம் என மொத்தம் 3 ஆயிரத்து 760 வாகனங்களுக்கு புதிய எண் வழங்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட கார்களுக்கு வழங்கப்படும் பதிவு சான்றிதழ் 15 ஆண்டுகளுக்கு செல்லுபடி ஆகும். அதன் பின்னர் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை பசுமை வரி செலுத்தி புதுப்பிக்க வேண்டும். இதே போன்று, சரக்கு மற்றும் பயணிகள் வாகனங்களுக்கு வழங்கப்படும் பதிவு சான்றிதழ் முதல் 8 ஆண்டுகள் வரை 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை தகுதிச்சான்றிதழ் பெற வேண்டும். அதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும் பசுமை வரி செலுத்தி புதுப்பிக்க வேண்டும். இவ்வாறு வட்டார போக்குவரத்து அலுவலர்கள் தெரிவித்தனர்.

## அவலாஞ்சி சூழல் சுற்றுலா மையம் இன்று ஒரு நாள் மூடல் சுற்றுலா பயணிகள் வர வேண்டாம்: வனத்துறையினர் அறிவிப்பு

**ஊட்டி, ஜன.01-**

சர்வதேச சுற்றுலாத்தலமான நீலகிரிக்கு தமிழக மட்டுமல்லாது வெளி மாநிலங்களில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வருகின்றனர். இவ்வாறு வரும் சுற்றுலா பயணிகளில் பலர் ஊட்டி நகரை அடுத்த வனப்பகுதியை ஒட்டிய பல்வேறு சூழல் சுற்றுலா மையங்களுக்கு செல்வ ஆர்வம் காட்டுகின்றனர். அங்கு சென்று நீலகிரியில் வனவிலங்குகள் மற்றும் நீலகிரியுடன் பிரத்தியேக தாவரங்கள் குறித்து தெரிந்து கொள்கின்றனர்.

அந்த வகையில் நீலகிரி மாவட்டத்தில் உள்ள சூழல் சுற்றுலா தளங்களில் பல தரப்பினரை கவரும் வகையில் முக்கிய இடமாக அவலாஞ்சி உள்ளது. இயற்கை எழில் நிறைந்த சோலை காடுகள் மற்றும் அவலாஞ்சி அணை ஆகியவற்றைக் காண தினந்தோறும் சுற்றுலா பயணிகள் வரும் நிலையில் அவர்களை அங்குள்ள சூழல் சுற்றுலா மையம் சார்பாக வாகனங்களில் அழைத்துச் சென்று சுற்றி காண்பிக்கப்பட்டு வருகிறது. அவலாஞ்சி இந்திய அளவில் அதிக மழை பெய்யும் இடங்களில் ஒன்றாக இருக்கிறது.

இந்த நிலையில் புத்தாண்டு நாளான இன்று (வியாழக்கிழமை) அவலாஞ்சி பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீபவானி அம்மன் ஆலயத்தில் சிறப்பு பூஜை நடைபெற உள்ளது. இந்த கோவிலுக்கு உள்ளூர் பொதுமக்கள் அதிகளவில் வருவார்கள் என்பதால் நாளை ஒரு நாள் மட்டும் அவலாஞ்சி சூழல் சுற்றுலா தளம் மூடப்படுவதாக மாவட்ட வனத்துறை அறிவித்து உள்ளது.

இதனை அடுத்து சுற்றுலா பயணிகள் யாரும் இன்று (வியாழக்கிழமை) அவலாஞ்சிக்கு வர வேண்டாம் என்றும் வத்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். மேலும் நாளை (வெள்ளிக்கிழமை) முதல் வழக்கம் போல அவலாஞ்சி சூழல் சுற்றுலா மையம் செயல்படும் என்றும் வனத்துறை சார்பாக அறிவிக்கப்பட்டு உள்ளது.

**ENROLLMENT NOTICE**

After 10days of the publication of this notice and within THREE months thereafter I, SHYAMSUNDAR. T S/O A.THANGARAJ, Age 26 years, permanently residing at, NO-7, SAMANTHI STREET, VIVEKANADA NAGAR, TIRUMULLAIVOYAL, AMBATTUR OT. CHENNAI.Pin. 600053. intend having my enrollment as an advocate moved before the bar council of Tamilnadu, Bar council Buildings High court campus, Chennai-104. Those who have any valid objections may notify the same to Bar Council within 10 days.

SHYAMSUNDAR. T

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை,**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண். 96 / 2025- 2026 / க ( க&ப)வ-1/சென்னை/ நாள்: 30.12.2025**
**ஒப்பந்தம்-Lumpsum**
**குறுகியகால ஒப்பந்தப்புள்ளி அழைப்பு (இணையதள வழியில் மட்டும்)**

தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக, கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்-1, சேப்பாக்கம், சென்னை-5 அவர்களால் கீழ்க்காணும் பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பொதுப்பணித்துறையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பெற்றுக் கொள்ளப்படும்.

| வ.எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு லட்சங்களில் | முன்வைப்புத் தொகை (ரூபாயில்) மற்றும் பணிமுடிக்க வேண்டிய காலம் | தகுதி பெற்ற பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | ஒரு உறை முறை | | | |
| 1. | திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள தண்டுரை (சேக்காடு கிராமத்தில் அமைந்துள்ள திருவள்ளூர் மாவட்ட அரசு மாதிரிப் பள்ளிக்கு மாணவிகள் விடுதி கட்டும் பணி. | ரூ.370.56 இலட்சங்கள் | ரூ.1,96,000/- 6 (ஆறு) மாதங்கள் | பொதுப்பணித் துறையில் பதிவு பெற்ற வகுப்பு -3 மற்றும் அதற்கு மேல் (திருத்திய வகுப்பின்படி) |

குறிப்பு : 1. ஒப்பந்தப்புள்ளி குறித்த தகவல்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கீழ்க்காணும் இணையதளத்தின் மூலம் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். http://tntenders.gov.in.
2. பணித்தள ஆய்வு சான்று உரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பிக்க கடைசி நாள். 06.01.2026.
3. இணையதளம் வாயிலாக நிறைவு செய்யப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும், நேரமும் 09.01.2026 மாலை 3.00 மணி வரை
4. பெறப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாளும், நேரமும் 09.01.2026 மாலை 4.00 மணி
5. ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை மற்றும் ஒப்பந்தத்தில் ஏதேனும் மாற்றங்கள் / திருத்தங்கள் இருப்பின் http://tntenders.gov.in இணையதளத்தில் மட்டுமே தெரிவிக்கப்படும்

கண்காணிப்புப் பொறியாளர்,பொபது.,
கட்டட கட்டுமானம் (ம) பராமரிப்பு வட்டம்-1, சேப்பாக்கம், சென்னை-5.
செ.ம.தொ.இ /6888 / ஒப்பந்தப்புள்ளி /2025

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
**கட்டடம் (க&ப) வட்டம், திருநெல்வேலி - 627 002**

**மொத்த ஒப்பந்தம் இனவிலை முறை**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.32, க.பொ.க/(க&ப) வட்டம், திருநெல்வேலி / 2025–2026 / நாள்: 30.12.2025.**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட (க&ப) வட்டம், திருநெல்வேலி அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூன்று பணிகளுக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. பணிக்கான விவரம், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்.
2. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் 06.01.2026 முதல் 20.01.2026, மாலை 3.00 மணி வரை.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் 20.01.2026, மாலை 3.00 மணி வரை.
4. ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்: 21.01.2026 மாலை 3.30 மணி

கண்காணிப்புப் பொறியாளர் பொபது.,
கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், திருநெல்வேலி.
செ.ம.தொ.இ/6887/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
**கட்டடம் (க&ப) வட்ட அலுவலகம், சிவகங்கை**
**ஒப்பந்தப்புள்ளி படிவம் / மொத்த ஒப்பந்தம் / இனவிலைமுறை**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 28க.பொ/ கட்டடம் (க&ப) வட்டம்/சிவ / 2025-2026 / நாள் : 30.12.2025**

தமிழக ஆளுநரின் சார்பாக கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து, கட்டட (க&ப) வட்டம், சிவகங்கை அவர்களால் இரண்டு பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றது.

1) வ.எண்.1 மற்றும் 2 - ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் 06.01.2026 மாலை 03.00 மணி முதல் 21.01.2026, மாலை 03.00 மணி வரை இணையதளத்தில் கிடைக்கும், (மின்னணு முறை)
2) வ.எண்.1 மற்றும் 2 - ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி 21.01.2026, மாலை 03.00 மணி வரை (மின்னணு முறை)
3) வ.எண்.1 மற்றும் 2 - ஒப்பந்தப்புள்ளி 22.01.2026, 03.00 மணியளவில் திறக்கப்படும் (மின்னணு முறை)
4) வ.எண்.1 மற்றும் 2 - ஒப்பந்ததாரர் பணித்தளத்தினை பார்வையிட்ட சான்றிதழ் பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள்.12.01.2026
5) வ.எண்.1 மற்றும் 2 -செயற்பொறியாளரிடமிருந்து பணித்தளத்தினை பார்வையிட்ட சான்றிதழ் பெறுவதற்கான கடைசி நாள்.20.01.2026

ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் வேலையின் தோராய மதிப்பு, முன் வைப்புத் தொகை விவரங்கள், பணிக்காலம் மற்றும் இதர விவரம் அரசு இணையதளமான https://tntenders.gov.in என்ற அரசு இணையதளத்தில் இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் திருத்தங்கள் / மாறுதல்கள் ஏதேனும் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து
கட்டடம் (க&ப) வட்டம், சிவகங்கை
செ.ம.தொ.இ / 6882 / ஒப்பந்தப்புள்ளி / 2025

**தமிழ்நாடு அரசு / பொதுப்பணித்துறை**
**திட்டங்கள், சேப்பாக்கம், சென்னை 600 005**
**மறு–மின்னணு ஒப்பந்தப்புள்ளி எண் 49தபொ/வஅ/2025–26 நாள் : 30.12.2025**
**ஒப்பந்தப்புள்ளி படிவம்: மொத்த தொகை/விலை விகித முறை**

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும், மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் தலைமைப்பொறியாளர், பொபது, திட்டங்கள், சேப்பாக்கம், சென்னை 600 005 அவர்களால் பதிவு பெற்ற தகுதி வாய்ந்த பொதுப்பணித்துறை கட்டட ஒப்பந்ததாரர்களிடமிருந்து மின்னணு முறையில் கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தங்கள் கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | தோராய மதிப்பீடு (சரக்கு மற்றும் 18% சேவை வரியுடன்) ரூபாய் இலட்சத்தில் | முன்வைப்புத் தொகை ரூபாய் மற்றும் பணி முடிக்க வேண்டிய காலம் | தகுதியான ஒப்பந்ததாரர் | முன்வைப்பு தொகை மின்னணு முறையில் செலுத்தவேண்டிய செயற்பொறியாளர், பொபது தொழில் நுட்பக் கல்வி கோட்டம் |
|---|---|---|---|---|---|
| 1 | தர்மபுரி மாவட்டம், அரூர் அரசு கலைக் கல்லூரியில் 10 வகுப்பறைகள், ஒரு மாணவர் மற்றும் 1 மாணவியர் கழிப்பறை கட்டும் பணி. (2-ம் அழைப்பு) | 362.84 | 191500/- 10 மாதங்கள் | வகுப்பு 3 மற்றும் அதற்கு மேல் | வேலூர் |
| 2 | நாமக்கல் மாவட்டம் நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரியில் 8 வகுப்பறைகள் கட்டும் பணி. (2-ம் அழைப்பு) | 177.47 | 99000/- 8 மாதங்கள் | வகுப்பு 4 மற்றும் அதற்கு மேல் | திருச்சி |
| 3 | ஈரோடு அரசு பொறியியல் கல்லூரியில் 150 மாணவியர் விடுதி கட்டும் பணி. (இருஉறைமுறை) (2-ம் அழைப்பு) | 924.40 | 472200/- 16 மாதங்கள் | வகுப்பு 2 மற்றும் அதற்கு மேல் | கோயம்புத்தூர் |

(1) ஒப்பந்தப்புள்ளி படிவங்கள், மின்னணு வழியாக ஒப்பந்தப்புள்ளி கோருதல் மற்றும் அறிவுறுத்தல்கள் குறித்து http://tntenders.gov.in இணையதளத்தில் தெரிந்துகொள்ளலாம் (2) ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பதிவேற்றம் செய்ய வேண்டிய கடைசிநாள் மற்றும் நேரம்: 20.01.2026 மாலை 3.00 மணிவரை (மின்னணு முறை) (சர்வர் சிஸ்டம் கடிகாரம்) (3) மின்னணு ஒப்பந்த புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 21.01.2026 மாலை 3.30 மணி அளவில் (சர்வர் சிஸ்டம் கடிகாரம்) (4) மின்னணு ஒப்பந்தத்தில் கலந்துகொள்ள மின்னணு கையொப்பம் கட்டாயமாகும். ஒப்பந்தப்புள்ளி விபரங்களில் ஏற்படும் மாற்றங்கள் திருத்தம் மேற்காணும் இணைய தளத்தில் மட்டும் வெளியிடப்படும்.

தலைமைப்பொறியாளர்,பொபது
திட்டங்கள், சேப்பாக்கம், சென்னை 5
செமதொஇ/6876/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
ஒப்பந்த முறை - மொத்தத் தொகை

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 64 / TVM- CLE / 2025 -2026 / Dated. 30.12.2025.**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும், திருவண்ணாமலை பொதுப்பணித்துறை கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்ட கண்காணிப்புப் பொறியாளர் அவர்களால் அட்டவணையில் காணும் பணிகளுக்கு 22.01.2026 அன்று இறுதி நாளாக கொண்டு இணையதள நேரப்படி பிற்பகல் 3.00 மணி வரையில் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள், தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறையில் பதிவு செய்துள்ள தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலமாக ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 02.01.2026 முதல் 22.01.2026 அன்று பிற்பகல் 3.00 மணி வரை இலவசமாக பதிவிறக்கம் செய்து மின்னணு முறையில் சமர்ப்பிக்கலாம். பெறப்படும் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் 22.01.2026 அன்று பிற்பகல் 4.00 மணியளவில் மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையில் திறக்கப்படும்.


| வ. எண். | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு ஜி.எஸ்.டி. உட்பட (ரூபாய் இலட்சங்களில்) | முன் வைப்புத் தொகை (ரூபாயில்) | பணி முடிக்க வேண்டிய காலம் (பருவ காலங்கள் உட்பட) |
|---|---|---|---|---|
| 1. | விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், பொம்மையார்பாளையத்தில் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு நினைவு மண்டபம் கட்டும் பணி. | 245.50 | ரூ. 1,33,000 /- | 8 மாதங்கள் |
| 2. | திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மின்னணு வாக்கு பதிவு கருவிகள் மற்றும் VVPATS ஆகியவற்றை முறையாக சேமிப்பதற்கான கிடங்கு கட்டும் பணி. | 467.00 | ரூ. 2,43,500 /- | 9 மாதங்கள் |
| 3. | கள்ளக்குறிச்சி மாவட்டம், வீரசோழபுரம் (கிழக்கு)– இல் மின்னணு வாக்கு பதிவு கருவிகள் மற்றும் VVPATS ஆகியவற்றை முறையாக சேமிப்பதற்கான கிடங்கு கட்டும் பணி. | 479.75 | ரூ. 2,50,000 /- | 9 மாதங்கள் |

ஒப்பந்தக்காரார் தகுதி : வகுப்பு III மற்றும் அதற்கு மேல்.
முன் வைப்புத் தொகை இணையவழி மூலமாக மட்டுமே செலுத்தப்பட வேண்டும்,
இதர விவரங்கள் மற்றும் விதிமுறைகளை https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலமாக தெரிந்து கொள்ளலாம்.

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து.,
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு ) வட்டம்,
திருவண்ணாமலை-4
செ.ம.தொ.இ./6874/ஒப்பந்தப்புள்ளி/2025

உலக செஸ் சாம்பியன்ஷிப்பில் வெண்கலம்:

# அர்ஜுன் எரிகைசிக்கு பிரதமர் பாராட்டு



**புதுடெல்லி, ஜன. 06-**

உலக பிளிட்ஸ் செஸ் சாம்பியன்ஷிப்பில் வெண்கலம் வென்ற இந்திய வீரர் அர்ஜுன் எரிகைசிக்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

**2-வது இந்தியர்...**

எர்ஜுன் எரிகைசி சில நாள்களுக்கு முன்னதாக உலக ரேபிட்ஸ் சாம்பியன் ஷிப்பிலும் வெண்கலம் வென்றது குறிப்பிடத்தக்கது. உலகின் நம்.1 வீரரான மாக்னஸ் கார்ல்செனை லீக் சுற்றில் அர்ஜுன் எரிகைசி வீழ்த்தினார். அரையிறுதியில் உஸ்பெகிஸ்தான் கிராண்ட்மாஸ்டர் அப்துசதா ரோவ் உடன் 0.5- 2.5 என்ற புள்ளிகளில் தோல்வி கண்டார். ரேபிட்ஸ், பிளிட்ஸ் இரண்டு பிரிவிலும் வெண்கலம் வென்ற இரண்டாவது இந்தியர் என்ற சாதனையை அர்ஜுன் எரிகைசி படைத்துள்ளார்.

**உத்வேகத்தை...**

இதற்கு முன்பாக விஷ்வநாதன் ஆனந்த் இந்த சாதனையை நிகழ்த்தியிருந்தார். இந்த வரலாற்று வெற்றிக்கு இந்திய பிரதமர் மோடி தனது எக்ஸ் பக்கத்தில் கூறியதாவது: தோகாவில் நடைபெற்ற உலக பிளிட்ஸ், ரேபிட்ஸ் செஸ் சாம்பியன்ஷிப்பில் வெண்கலம் வென்ற அர்ஜுன் எரிகைசிக்கு வாழ்த்துகள். அவரது திறமை, பொறுமை மற்றும் ஆர்வம் பாராட்டத்தக்கதாக இருக்கிறது. இவரது வெற்றி இளைஞர்களுக்கு உத்வேகத்தை அளிக்கும். அவருக்கு என்னுடைய சிறப்பான வாழ்த்துகள் எனக் கூறியுள்ளார். மகளிர் பிரிவில் கொனேரு ஹம்பி ஒரு பிரிவில் மட்டும் வெண்கலம் வென்றார். அவருக்கு மோடி தனது வாழ்த்துகளைத் தெரிவித்திருந்தார்.

திருப்பரங்குன்றம் மலை விவகாரம்:

# மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேட்டி

**திருப்பரங்குன்றம், ஜன. 01-**

திருப்பரங்குன்றம் மலை மீது உள்ள தீபத்தூணியில் விளக்கேற்றுவதை யாராலும் தடுக்க முடியாது. மலை மீது தீபமேற்றுவதை தடுக்க நினைப்பவர்களை சிவன் பார்த்துக் கொள்வார் என்று தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சியின் நிறைவு விழா ராமேசுவரத்தில் நேற்று முன்தினம் நடந்தது. சிறப்பு விருந்தினராக துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் பங்கேற்றார். இதில் கவர்னர் ஆர்.என்.ரவி, மத்திய அமைச்சர்கள் தர்மேந்திர பிரதான், எல்.முருகன், பா.ஜனதா மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், தர்மர் எம்.பி., த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன், வானதி சீனிவாசன் எம்.எல்.ஏ., சென்னை ஐ.ஐ.டி. இயக்குனர் காமகோடி உள்பட பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிலையில், தமிழகம் வந்துள்ள மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் நேற்று சாமி தரிசனம் செய்தார். அதன்பின்னர் செய்தியாளர்கள் சந்திப்பில் தர்மேந்திர பிரதான் கூறியதாவது:- திருப்பரங்குன்றம் மலை மீது உள்ள தீபத்தூணியில் விளக்கேற்றுவதை யாராலும் தடுக்க முடியாது. மலை மீது தீபமேற்றுவதை தடுக்க நினைப்பவர்களை சிவன் பார்த்துக் கொள்வார். இந்த விவகாரத்தை அரசியல் ரீதியாக தமிழக அரசு கையாள்வது கண்டிக்கத்தக்கது. திருக்குறளை சமூகத்திலிருந்து எப்படி முடியாதோ அதுபோலதான் திருப்பரங்குன்றமும். இவ்வாறு அவர் கூறினார்.




**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஈரோடு அரசு பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் அரியலூர், தர்மபுரி, ஈரோடு, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், பெரம்பலூர், இராமநாதபுரம், நீலகிரி, திருவாரூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, விழுப்புரம் ஆகிய 16 மாவட்டங்களைச் சேர்ந்த 4,824 நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தலா 30 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய 6,890 டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரண தொகுப்புகளை வழங்கினார்.**

4 மாவட்டங்களில் ரூ.48 கோடியில்

# விளையாட்டு உட்கட்டமைப்பு பணிகள்: துணை முதல்வர் உதயநிதி அடிக்கல்

**சென்னை, ஜன. 01-**

சென்னை உள்ளிட்ட 4 மாவட்டங்களில் ரூ.48.76 கோடியில் விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

சென்னை, செங்கல்பட்டு, சேலம் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் ரூ.48.76 கோடி மதிப்பீட்டில் செயற்கை இழை ஓடுதளப் பாதை மறுசீரமைக்கும் பணி, சர்வதேச தரத்திலான டிராப் மற்றும் ஸ்கீட் துப்பாக்கிச் சுடுதல் பயிற்சி அகாடமி, புதிய செயற்கை இழை ஓடுதள பாதை உள்ளிட்ட விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேறஅறு அடிக்கல் நாட்டினார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;- தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (31.12.2025) குறிஞ்சி முகாம் அலுவலத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் சார்பில் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயற்கை இழை ஓடுதளப் பாதை மறுசீரமைக்கும் பணியினை காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூர் வட்டம் கீரப்பாக்கம் கிராமத்தில் 17.01 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேச தரத்திலான டிராப் மற்றும் ஸ்கீட் துப்பாக்கிச் சுடுதல் பயிற்சி அகாடமி அமைக்கும் பணி, சேலம் மாவட்ட பல்நோக்கு விளையாட்டு வளாகத்தில் 11.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய செயற்கை இழை ஓடுதள பாதை அமைக்கும் பணி, ராமநாதபுரம் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் 12.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய செயற்கை இழை ஓடுதளப் பாதை அமைக்கும் பணி என மொத்தம் 48.76 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான விளையாட்டு உள்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளுக்கு காணொலி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முதல்வர், உலகின் எப்பகுதியில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகளிலும் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்ள பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காக தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளையை உருவாக்கி செயல்படுத்தி வருகிறார். இந்த அறக்கட்டளை நிதியின் கீழ் தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தங்களுக்கு தேவையான அதிநவீன விளையாட்டு உபகரணங்களை வாங்கி கொள்ளவும், தேசிய, சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்வதற்கான செலவு, தங்குமிடம், பயிற்சி பெறுதல், பயணத்திற்கான செலவுகளை மேற்கொள்ள நிதி உதவி வழங்க உத்தரவிட்டுள்ளார்.

அதன் அடிப்படையில் தேசிய, சர்வதேச போட்டிகளில் பங்கேற்ற மற்றும் பதக்கங்களை வென்ற வீரர், வீராங்கனைகள் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் வகையில் தயார் செய்யவதற்காக தடகள வீரர்கள் ர.மானவ், ஜெ.ஆதர்ஷ்ராம், கூடைப்பந்தாட்ட வீரர் பி.பியோடர் ஆதித்தன், குத்துச்சண்டை வீரர் பி.தர்ஷன், தடகள வீரர் யோபின், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வாலிபால் வீராங்கனைகள் ம.ராகஸ்ரீ, பா.சாதனா ஆகிய விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்கிட மொத்தம் 2,80,000/- ரூபாய்க்கான காசோலையை துணை முதல்வர் வழங்கினார்.

மேலும் தேசிய அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வென்ற சைக்கிளிங் வீரர்கள் ச.பிரனேஷ் மற்றும் செள.கவிஷ் ஆகியோருக்கு மொத்தம் 12,48,580/- மதிப்பிலான சர்வதேச தரத்திலான சைக்கிள் மற்றும் உபகரணங்களை வழங்கினார். தொடர்ந்து சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்று வரும் நீச்சல் வீர்ர் உ.அபிஷேக்கிற்கு மலேசியாவிற்கு சென்று பயிற்சி மேற்கொள்வதற்காக ரூ.35,000/- க்கான காசோலையை துணை முதல்வர் வழங்கினார்.

நேற்றைய தினம் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியின் கீழ் மொத்தம் 15,63,580/- ரூபாய் மதிப்பிலான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பயிற்சிக்கான உதவித்தொகை காசோலைகளை வழங்கினார். பல்வேறு சர்வதேச போட்டிகளில் பதக்கங்கள் வென்ற ஸ்னூக்கர், பில்லியர்ட்ஸ், ரோல் பால் மற்றும் பூப்பந்தாட்ட விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகள் நேற்று துணை முதல்வரை சந்தித்து தாங்கள் வென்ற பதங்கங்கள் மற்றும் சான்றிதழ்களை காண்பித்து வாழ்த்து பெற்றார்கள். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மெட்ரோ ரெயில் திட்டம்:

# சுரங்கம் தோண்டும் பணியை முடித்தது ‘மேலகிரி’ எந்திரம்

**சென்னை, ஜன. 01-**

மெட்ரோ ரெயில் திட்டம் 2-வது கட்டத்தில் சுரங்கம் தோண்டும் பணியை ‘மேலகிரி’ எந்திரம் வெற்றிகரமாக முடித்தது.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், கட்டம் 2-ல் 118.9 கி.மீ. நீளத்திற்கு மேலும் 3 வழித்தடங்களை கட்டி முடிக்க திட்டமிட்டு பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

சென்னை மெட்ரோ ரெயில் திட்டம் கட்டம் 2 வழித்தடம் 3-ல் சுரங்கப்பாதை கட்டுமான பணிகளில், சுரங்கம் தோண்டும் இயந்திரம் ‘மேலகிரி’ அயனாவரம் நிலையத்திலிருந்து பெரம்பூர் நிலையம் வரையிலான 861 மீட்டர் நீளமுள்ள சுரங்கப்பாதை அமைக்கும் பணியை முடித்து பெரம்பூர் நிலையத்தை வந்தடைந்தது. இது டாடா நிறுவனத்தின் TU02 ஒப்பந்தப் பிரிவில் எட்டாவது சுரங்கம் தோண்டும் இயந்திரத்தின் வெற்றிகரமான பணி நிறைவு ஆகும். சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் தனது இரண்டாம் கட்டத் திட்டத்தில் இதுவரை மொத்தம் 19 சுரங்கம் தோண்டும் பணிகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

சுரங்கம் தோண்டும் இயந்திரம் மேலகிரி, பெரம்பூர் இரயில் நிலைய தண்டவாளங்கள் மற்றும் நடைமேடைகளுக்கு அடியில், அதிக மக்கள் தொகை கொண்ட மற்றும் நெருக்கமான கட்டிடங்கள் நிறைந்த பகுதிகளுக்கு அடியில் சுரங்கப்பாதை அமைக்கும் பணியை வெற்றிகரமாக முடித்தது. சுரங்கப்பாதை அமையும் வழியில் இருந்த 32-க்கும் மேற்பட்ட ஆழ்துளைக் கிணறுகள் முறையாகக் கையாளப்பட்டன. பொதுமக்களுக்கு எந்தவித இடையூறும் ஏற்படாத வகையில், அக்கிணறுகளுக்குப் பதிலாக மாற்று நீர் ஆதாரங்கள் மெட்ரோ நிர்வாகத்தால் வழங்கப்பட்டன. இந்நிகழ்வை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், டாடா நிறுவனம் மற்றும் பொது ஆலோசகர் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தளத்தில் இருந்து பார்வையிட்டனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

டி-20 கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகள்:

# தீப்தி சர்மா முதலிடம்

## ஆஸி., வீராங்கனை சாதனை முறியடிப்பு



**மும்பை, ஜன. 01-**

டி-20 கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகள் எடுத்தவர்கள் பட்டியலில் ஆஸ்திரேலிய வீராங்கனை மேகன் ஷட் சாதனையை முறியடித்து இந்திய வீராங்கனை தீப்தி சர்மா முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

**175 ரன்கள்...**

இந்தியா வந்துள்ள இலங்கை பெண்கள் கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடியது. நான்கு போட்டிகள் முடிவில் இந்திய அணி வெற்றி பெற்று டி20 தொடரில் 4-0 என கைப்பற்றியது. இதனையடுத்து இரு அணிகள் இடையிலான ஐந்தாவது மற்றும் கடைசி டி20 போட்டி கேரளாவின் திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. இதில் முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட்டுக்கு 175 ரன்கள் எடுத்தது.

**160 ரன்கள்...**

இலங்கை சார்பில் சமாரி கவிஷா திஹாரி, ராஷ்மிகா, சமாரி அட்டபட்டு ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். இதனை தொடர்ந்து களமிறங்கிய இலங்கை அணி 7 விக்கெட்டுகளை இழந்து 160 ரன்கள் மட்டுமே எடுத்து 15 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. இதன் மூலம் 5 டி20 போட்டிகளிலும் வெற்றி பெற்ற இந்திய அணி இலங்கையை ஒயிட் வாஷ் செய்துள்ளது.

**133 போட்டிகளில்...**

இந்த போட்டியில் தீபதி சர்மா 1 விக்கெட்டை வீழ்த்தினார். இதன்மூலம் மகளிர் டி20 கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய ஆஸ்திரேலியா வீராங்கனை மேகன் ஷட் சாதனையை தீப்தி சர்மா முறியடித்துள்ளார். அவர் 133 போட்டிகளில் விளையாடி 152 விக்கெட்டுகளை வீழ்த்தி இந்த பட்டியலில் முதல் இடத்தை பிடித்துள்ளார்.

**152 விக்கெட்டுகள்...**

டி20 கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீராங்கனை பட்டியலில் தீப்தி ஷர்மா 152 விக்கெட்டுகளுடன் முதல் இடத்தை பிடித்துள்ளார். அதனை தொடர்ந்து மேகன் ஷட் (ஆஸ்திரேலியா) 151 விக்கெட்டுகளுடன் 2-வது இடத்தில் உள்ளார். 3 முதல் 5 இடங்கள் முறையே நிடா டார் (பாகிஸ்தான்) 144 விக்கெட்டுகள், ஹென்றிட் இஷிம்வே (ருவாண்டா) 144 விக்கெட்டுகள் சோஃபி எக்லெஸ்டோன் (இங்கிலாந்து) 142 விக்கெட்டுகளை வீழ்த்தி உள்ளனர்.

டி-20 உலக கோப்பை தொடர்

# ஆப்கானிஸ்தான் அணி அறிவிப்பு



**காபூல், ஜன. 01-**

டி-20 உலக கோப்பை கிரிக்கெட் தொடர் பிப்ரவரி 7-ம் தேதி தொடங்கவுள்ள நிலையில், ரஷித் கான் தலைமையிலான ஆப்கானிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

15 வீரர்கள்....

20 அணிகள் இடையிலான 10-வது ஐ.சி.சி. டி20 உலக கோப்பை கிரிக்கெட் தொடர் பிப்ரவரி 7-ம் தேதி முதல் மார்ச் 8-ம் தேதி வரை இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறுகிறது. இதில் பங்கேற்கும் 20 அணிகள் 4 பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. இதில் நடப்பு ம்பிய னான இந்திய அணி ‘ஏ’ பிரிவில் பாகிஸ்தான், நமீபியா, நெதர்லாந்து மற்றும் அமெரிக்காவுடன் இடம் பெற்றுள்ளது. இந்நிலையில் இந்த தொடருக்கான 15 வீரர்கள் கொண்ட ஆப்கானிஸ்தான் அணி இன்று அறிவிக்கப்பட்டது. ஆப்கானிஸ்தான் அணியின் கேப்டனாக ரஷித் கான் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆப்கான் அணி:-

ரஷீத் கான் (கேப்டன்), இப்ராஹிம் சத்ரான், குர்பாஸ், முகமது இஷாக், அடல், தர்வீஷ் ரசூலி, ஷாஹிதுல்லா கமால், ஒமர்சாய், குல்பாடின் நைப், முகமது நபி, நூர் அகமது, முஜீப் ரஹ்மான், நவீன் உல் ஹக், ஃபருக்கி, அப்துல்லா அஹ்மத்சாய்.

இலங்கை அணிக்கு எதிரான டி-20 தொடர்:

# ஒயிட்வாஷ் செய்தது இந்திய மகளிர் அணி




**திருவனந்தபுரம், ஜன. 01-**

இலங்கை அணிக்கு எதிரான டி20 தொடரை இந்திய மகளிர் அணி ஒயிட்வாஷ் செய்துள்ளது.

**தொடரை வென்றது...**

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடந்து முடிந்த 4 போட்டிகளில் வெற்றி பெற்று தொடரை இந்திய அணி கைப்பற்றியது. இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையேயான 5வது டி20 போட்டி திருவனந்தபுரத்தில் நடைபெற்றது.

**பந்து வீச்சு தேர்வு...**

இதில், டாஸ் வென்ற இலங்கை அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து களமிறங்கிய இந்திய மகளிர் அணி 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 175 ரன்கள் குவித்தது. தொடக்கத்தில் இந்திய அணி தடுமாறிய நிலையில் கேப்டன் ஹனுமந்த்பிரீத் கவுரின் அதிரடி ஆட்டத்தால் 175 ரன்கள் குவித்தது. இந்திய அணியின் சார்பில் அதிகபட்சமாக கேப்டன் ஹனுமந்த்பிரீத் கவுர் 43 பந்துகளில் 68 ரன்கள் குவித்தார்.

**176 ரன்கள் இலக்கு...**

இதையடுத்து, 176 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற வலுவான இலக்குடன் இலங்கை களமிறங்கியது. இலங்கை அணியின் சார்பில் களமிறங்கி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஹாசினி பெரேரா 65 ரன்களும், இமிஷா துலானி 50 ரன்களும் எடுத்தனர். மற்ற வீராங்கனைகள் சொற்ப ரன்களில் வெளியேற அந்த அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 160 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன்மூலம் இலங்கை அணியை 15 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியதுடன், 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரை (5-0) முழுமையாக கைப்பற்றி இந்திய மகளிர் அணி அசத்தியது.

## ஹர்மன்பிரீத் புதிய மைல்கல்

இந்தியா-இலங்கை பெண்கள் கிரிக்கெட் அணிகள் மோதிய 5-வது மற்றும் கடைசி 20 ஓவர் போட்டி நேற்று திருவனந்தபுரத்தில் நடந்தது. இதில் இந்தியா 15 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன்மூலம் 20 ஓவர் தொடரை 5-0 என்ற கணக்கில் இந்தியா முழுமையாக கைப்பற்றியது. இந்த போட்டியில் 68 ரன்கள் எடுத்த இந்திய கேப்டன் ஹர்மன்பிரீத் கவுருக்கு ஆட்ட நாயகி விருது வழங்கப்பட்டது. இது அவருக்கு 12-வது ஆட்ட நாயகி விருதாகும். இதன்மூலம் சர்வதேச 20 ஓவர் கிரிக்கெட்டில் இந்திய அணிக்காக அதிக முறை ஆட்ட நாயகி விருது பெற்றவர் என்ற சாதனையை படைத்த முன்னாள் கேப்டன் மிதாலி ராஜை ஹர்மன்பிரீத் கவுர் சமன் செய்தார்.

மிதாலி ராஜ் 89 போட்டிகளில் 12 முறை இந்த விருதை வென்றிருந்தார். ஹர்மன்பிரீத் இதுவரை 187 போட்டிகளில் விளையாடி இந்த மைல்கல்லை எட்டியுள்ளார். தொடர் நாயகி விருது ஷபாலி வர்மாவுக்கு வழங்கப்பட்டது. இது அவருக்கு 3-வது விருதாகும். இதன் மூலம் 20 ஓவர் போட்டிகளில் அதிக முறை தொடர் நாயகி விருது வென்ற இந்திய வீராங்கனைகள் பட்டியலில் மிதாலி ராஜ், ஹர்மன்பிரீத் கவுர் மற்றும் தீப்தி சர்மா ஆகியோருடன் ஷபாலி வர்மாவும் இணைந்தார்.

## கார்ல்சென் மீண்டும் சாம்பியன்

கத்தாரில் நடைபெற்ற உலக பிளிட்ஸ் செஸ் சாம்பியன்ஷிப்பில் உலகின் நம்.1 வீரர் மாக்னஸ் கார்ல்சென் தங்கம் வென்று அசத்தினார். இந்தப் பிரிவில் இது 9-வது பதக்கமாகும். ஒட்டுமொத்தமாக இது அவரது 20-ஆவது உலக சாம்பியன் பட்டம் என்பதும் குறிப்பிடத்தக்கது. கத்தாரில் நடைபெற்ற உலக பிளிட்ஸ் செஸ் சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் அர்ஜுன் எரிகைசி வெண்கலம் வென்றார். இதற்கு சில நாள்கள் முன்னதாக ரேபிட்ஸ் பிரிவில் வெண்கலம் வென்றதும் கவனிக்கத்தக்கது.

இந்திய வீரர் அர்ஜுன் எரிகைசியிடம் லீக் சுற்றில் தோல்வியுற்ற கார்ல்சென் அதற்கு பிறகான போட்டிகளில் சிறப்பாக விளையாடி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இறுதிப் போட்டியில் உஸ்பெகிஸ்தானின் அப்துசதாரோவ் உடன் மோதிய கார்ல்சென் முதல் கேமில் தோல்வி கண்டார். பின்னர் இரண்டாவது கேமில் மீண்ட கார்ல்சென் மூன்றாவது கேமில் டிரா செய்தார். இறுதியில் நான்காவது கேமில் அசத்தலாக வென்று இந்தப் பிரிவில் தனது 9-வது பதக்கத்தை நீட்டித்தார்.

## கோமாவில் ஆஸ்திரேலிய வீரர்

ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் பேட்ஸ்மேன் டேமியன் மார்ட்டின் மூளைக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், தற்போது கோமா நிலையில் உள்ளதாக செய்தி வெளியாகி உள்ளது. 54 வயதான டேமியன் மார்ட்டின், கடந்த டிசம்பர் 26 அன்று உடல்நலக்குறைவு ஏற்பட்டதையடுத்து குயின்ஸ்லாந்தில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். பாதிப்பு தீவிரமாக இருந்ததால், மருத்துவர்கள் அவரைத் தூண்டப்பட்ட கோமா நிலைக்குக் கொண்டு சென்று தீவிர சிகிச்சைப் பிரிவில் (ICU) வைத்துள்ளனர்.

மூளை மற்றும் தண்டுவடத்தைச் சுற்றியுள்ள சவ்வுகளில் வீக்கத்தை ஏற்படுத்தும் மெனிஞ்சைடிஸ் (Meningitis) எனப்படும் மூளைக்காய்ச்சலால் டேமியன் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. டேமியன் உடல்நிலை மோசமாக இருந்தாலும், சிறந்த முறையில் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருவதாக அவரது நெருங்கிய நண்பரும், முன்னாள் வீரருமான ஆடம் கில்கிறிஸ்ட் தெரிவித்துள்ளார். பல முன்னாள் வீரர்களும், தற்போதையை வீரர்களும் டேமியன் குணமடைய பிரார்த்தித்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

பொங்கல் பரிசுத் தொகுப்புக்கு

# அரசு ரூ.248 கோடி நிதி ஒதுக்கீடு தமிழ்நாடு அரசாணை வெளியீடு

**சென்னை, ஜன. 01-**

பொங்கல் பரிசுத் தொகுப்பில் ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு கொள்முதல் செய்வதற்கு ரூ.248 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பொங்கல் பண்டிகையை பொதுமக்கள் சிறப்பாக கொண்டாடும் வகையில் ஆண்டுதோறும் தமிழக அரசு சார்பில் ரேஷன் கடைகள் மூலம் பொங்கல் பரிசு தொகுப்பு மற்றும் ரொக்கப் பணம் வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பின்னர் 2022-ம் ஆண்டு பச்சரிசி, வெல்லம், முந்திரி, திராட்சை உள்பட 20 பொருட்கள் அடங்கிய தொகுப்பும், கரும்பும் வழங்கப்பட்டது. கடந்த 2023 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளில் ஒரு கிலோ பச்சரிசி, சர்க்கரை, கரும்புடன் தலா ஆயிரம் ரூபாய் ரொக்கப்பணமும் வழங்கப்பட்டது.

ஆனால், கடந்த பொங்கல் பண்டிகைக்கு பச்சரிசி, சர்க்கரை, கரும்பு மட்டும் வழங்கப்பட்டு ரொக்கப் பரிசு வழங்கப்படாத நிலையில், அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ளதால் பச்சரிசி, சர்க்கரை மற்றும் கரும்புடன் சேர்த்து கடந்த ஆண்டுகளில் ஏற்கனவே வழங்கப்பட்ட ரொக்கப்பணத்தை விட கூடுதலாக ரொக்கப் பணம் பரிசாக வழங்கப்படும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடையே எழுந்துள்ளது.

இந்தநிலையில், 2026 பொங்கல் பரிசுத் தொகுப்புக்கு ரூ.248 கோடி நிதி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு கொள்முதல் செய்வதற்கு இத்தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 2027 டிசம்பர் 31-ம் தேதி வரை

# மின்சார வாகனங்களுக்கு மேலும் 2 ஆண்டுகள் வரி விலக்கு நீட்டிப்பு

## தமிழ்நாடு அரசு புதிய அறிவிப்பு

**சென்னை, ஜன. 01-**

தமிழகத்தில் மின்சார வாகனங்களுக்கான 100 சதவீதம் சாலை வரி விலக்கு 2027 டிசம்பர் 31ஆம் தேதி வரை நீட்டிக்கப்படுவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது

சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தாத, பேட்டரியில் இயங்கும் மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிக்க மத்திய மற்றும் மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. அந்த வகையில், தமிழக அரசு 2019ஆம் ஆண்டு தமிழக மின்சார வாகனக் கொள்கையை வெளியிட்டது. மின்சார வாகனங்களின் விற்பனையை அதிகரிக்கும் நோக்கில் 2022ஆம் ஆண்டு வரை 100 சதவீதம் சாலை வரி விலக்கு அளிக்கப்பட்டது.

பின்னர் இந்த சலுகை மேலும் 3 ஆண்டுகள் நீட்டிக்கப்பட்டு, 2025 டிசம்பர் 31 வரை மாற்றப்பட்டது.அதன்படி, மின்சார வாகனங்களுக்கான சாலை வரி விலக்கு சலுகை நேற்றுடன் முடிவடைய இருந்த நிலையில், அவகாசத்தை நீட்டிக்க வேண்டும் என்று வாகன உற்பத்தியாளர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மத்தியில் கோரிக்கை வைக்கப்பட்டது. இதனை ஏற்று, மின்சார வாகனங்களுக்கான 100 சதவீதம் சாலை வரி விலக்கு 2027 டிசம்பர் 31ஆம் தேதி வரை நீட்டிக்கப்படுவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அரசாணை வெளியிடப்பட்டுள்ள நிலையில், தமிழக தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா கூறியிருப்பதாவது: “தமிழக அரசு தொழில்துறைக்கு ஆதரவான அரசு என்பதை இது காட்டுகிறது. பேட்டரிகளில் இயங்கும் வாகனங்களின் எண்ணிக்கை 7.8 சதவீதமாக அதிகரித்துள்ளது. இன்னும் சார்ஜிங் உள்கட்டமைப்பை விரிவுபடுத்துவதிலும், முழு விநியோகச் சங்கிலியையும் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக மாற்றுவதிலும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது” என்றார்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் இராமநாதபுரம் மாவட்ட விளையாட்டு வளாகத்தில் புதிய செயற்கை இழை ஓடுதளப் பாதை அமைக்கும் பணிக்கு நேற்று அடிக்கல் நாட்டினார். உடன் அமைச்சர் ராஜகண்ணப்பன், கூடுதல் தலைமை செயலாளர் அதுல்ய மிஸ்ரா, விளையாட்டு ஆணைய உறுப்பினர் மேகநாத ரெட்டி உட்பட பலர் உள்ளனர்.

# அமைச்சர் அர. சக்கரபாணி முன்னிலையில் மாற்று கட்சியினர் தி.மு.க.வில் இணைந்தனர்



**ஒட்டன்சத்திரம், ஜன. 01-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி தொப்பம்பட்டி வடக்கு ஒன்றியம் பாலப்பன் பட்டியை ஊராட்சியை சேர்ந்த மாற்று கட்சியினர் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்து கொண்டனர்.

இந்த இணைப்பு நிகழ்யின் போது வடக்கு ஒன்றிய செயலாளர் பி.சி. தங்கம் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

# முதுகுளத்தூர்: இலவச பயிற்சி மையத்தில் 50 இளைஞர்கள் ராணுவ வீரர்களாக தேர்வு



**கடலாடி, ஜன. 01-**

முதுகுளத்தூர் இலவச பயிற்சி மையத்தில் 50 இளைஞர்கள் இராணுவ வீரராக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் கடலாடி சாயல்குடி உள்ளிட்ட கிராம பகுதிகள் விவசாயிகள் நிறைந்த கிராமங்கள் ஆகும். ஆற்றுபாசன வசதி இல்லாத இக்கிராமங்களில் விவசாயம் என்பது மழையை நம்பி நெல் மற்றும் கம்பு சோளம் குதிரை வாலி கேள்விரகு போன்ற தானியங்களை விவசாயம் செய்கின்றனர். இல்லையெனில் கரிமூட்ட தொழில் மற்றும் வெளிநாட்டிற்கு கூலி தொழிலாளியாக சென்று பிழைப்பு நடத்துகின்றனர். இந்நிலையில் இப்பகுதி மாணவர்கள் பட்டதாரிகள் வேலையின்றி கஷ்டப்படுகின்றனர் முதுகுளத்தூர் பகுதி இளைஞர்களுக்காக முன்னாள் ராணுவ வீரர்கள் ராமர் - கருப்பசாமி ஆகியோர் இந்திய ராணுவத்தில் பணியாற்ற விரும்பும் இளைஞர்களுக்கு பியூச்சர் டிபென்ஸ் அகடாமி என்ற பெயரில் இலவச பயிற்சி வகுப்புகள் நடத்துகின்றனர். இதில் விளையாட்டு- தேர்வுக்கான பயிற்சி-மருத்துவ பரிசோதனை உள்ளிட்டவை குறித்து நடத்தப்படுகின்றனர். கடந்த 2021 ஆம் ஆண்டு பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப் பட்டன.

200-க்கும் மேற்பட்டோர் பயிற்சி மையத்தில் கலந்து கொண்டனர். கடந்த 2025ம் ஆண்டு மட்டும் 82 பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். மேலும் டிசம்பர் மாதம் மட்டும் 50பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். 50 பேருக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தி வந்த நிலையில் 32 பேர் (அக்னி பாத்) இராணுவ பயிற்சிக்கு சென்றுள்ளனர். மீதம் 18 பேர் ராணுவ வீரர் தேர்ச்சி பெற்று தயார் நிலையில் உள்ளனர். வெற்றி பெற்ற இளைஞர்களுக்கு பாராட்டு விழா முதுகுளத்தூர் உள்ள தேவர் மஹாலில் நடைபெற்றது. இந்த விழாவில் ராணுவ வீரர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவித்து பாராட்டினர். நடைபெற்ற விழாவில் முன்னாள் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் ராஜசேகர் ஆசிரியர்கள் நவநீதன் கிருஷ்ணன் - ராமகிருஷ்ணன்- கார்த்திகேயன்-குமரேசன் -ரம்யா முன்னாள் ராணுவ வீரர்கள் போஸ்- நாகமுத்து முக்கிய பிரமுகர்கள் கதிர்வேல் -டிரசரி காளிமுத்து -நிலவள வங்கி மேலாளர் திருப்பதி -கூட்டுறவு வங்கி செயலாளர் முத்துச்செல்லம்- வழக்கறிஞர் லிங்கம்- தி.மு.க. பிரமுகர் சேர்வாரன் - குடிநீர் வாரிய அதிகாரி கணேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்

### திருமங்கலம் அரசு மருத்துவமனையில்

# ரூ.35 லட்சம் மதிப்பில் கணினி எக்ஸ்ரே மருத்துவ சேவை தொடக்கம்



**திருமங்கலம், ஜன. 01-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் அரசு மருத்துவமனையில் ரூ.35 லட்சம் மதிப்பிலான கணினி எக்ஸ்ரே - சி-ஆர்ம் சேவை மருத்துவ பயனாளர்களின் பயன்பாட்டிற்கென துவக்கப்பட்டுள்ளது. கம்ப்யூட்டரைஸ்டு எக்ஸ்ரே என்பது, பாரம்பரிய எக்ஸ்ரே படங்களுக்குப் பதிலாக, கதிர்வீச்சை டிஜிட்டல் முறையில் படம் பிடித்து, கணினி மூலம் உடனடியாகப் படத்தைக் காட்டும் ஒரு நவீன தொழில்நுட்பமாகும். இது விரைவான பட உருவாக்கம், குறைவான கதிர்வீச்சு, படங்களை எளிதாக சேமித்தல் மற்றும் திருத்துதல் போன்ற வசதிகளைத் தருகிறது. இதில் டிஜிட்டல் ரேடியோகிராபி மற்றும் கம்ப்யூட்டட் ரேடியோகிராபி என இரு வகைகள் உள்ளன, இவை இரண்டும் பிலிம் தேவையை நீக்கி, நேரடியாக கணினிக்கு படத்தை அனுப்புகின்றன.

இதே போல் சி- ஆர்ம் என்பது ஒரு மருத்துவ இமேஜிங் சாதனம் ஆகும், இது எக்ஸ்ரே தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அறுவை சிகிச்சைகளின் போது உடலின் உட்பகுதிகளை நிகழ்நேரத்தில் படம்பிடிக்க உதவுகிறது, இதன் 'C' வடிவ அமைப்பு எக்ஸ்ரே மூலத்தையும் படக் கண்டறியும் கருவியையும் இணைக்கிறது. இது மருத்துவ பயனாளர்களை சுற்றி நகர்ந்து பல்வேறு கோணங்களில் துல்லியமான காட்சிகளை அளிக்கிறது. இத்தகைய பயன்மிகு கணினி எக்ஸ்ரே இயந்திரம் ரூ.15 லட்சம் மதிப்பீட்டிலும், சி-ஆர்ம் இயந்திரம் ரூ.20 லட்சம் மதிப்பீட்டிலும் திருமங்கலம் அரசு மருத்துவமனையில் நிறுவப்பட்டு உள்ளது. குறிப்பாக எலும்பு முறிவு சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகளுக்கு உதவிடும் இந்த அதி நவீன கணினி எக்ஸ்ரே மற்றும் சி- ஆர்ம் இயந்திரங்கள் மருத்துவ பயனாளர்களின் சேவைக்கென நேற்று தொடங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வினில் மதுரை மாவட்ட சுகாதார நலப்பணிகள் இணை இயக்குநர் செல்வராஜ், திருமங்கலம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர், மருத்துவர்கள், செவிலியர்கள், பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே தண்டலை கிராமத்தில் ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் 74-ஆம் ஆண்டு மார்கழி சோமவார பஜனை மற்றும் அன்னதானம் அன்று இரவு பூச்சப்பரத்தில் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாளித்தார். இதற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகிகள் ஜோதிவேலாயுதம், பூங்கிளினியன் உட்பட கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

# திருமலைக்கேணியில் கார்த்திகை விழா



**நத்தம், ஜன. 01-**


திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே திருமலைக்கேணியில் உள்ள சுப்பிரமணிய சுவாமி கோவிலில் மார்கழி மாத கார்த்திகை பூஜை விழா நடந்தது.

இதையொட்டி முருகபெருமானுக்கு சிறப்பு அபிஷேகங்களும், அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது. தொடர்ந்து கோவிலை சுற்றி சுவாமி புறப்பாடு நடந்தது. இதில் சுற்று வட்டாரங்களிலிருந்தும், வெளி மாவட்ட பகுதிகளிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு புனித நீராடி முருகப் பெருமானை தரிசனம் செய்தனர்.

மேலும் அருகில் உள்ள காமாட்சி மவுனகுருசாமி மடத்திலும் பக்தர்கள் விளக்கேற்றி வழிபாடுசெய்தனர். இதைப்போலவே நத்தம்-கோவில்பட்டி கைலாசநாதர் கோவில் உள்பிரகாரத்தில் அமைந்துள்ள தண்டபாணி சன்னதியிலும், குட்டூர் அண்ணாமலையார் கோவில் முருகப்பெருமான் சன்னதியிலும், பகவதி அம்மன் கோவில் முருகப்பெருமான் சன்னதியிலும் கார்த்திகையொட்டி பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

### தமிழ்நாடு யாதவ மகாசபை தலைவர்

# நாட்டாமை கே.ஜெயக்குமார் ஆங்கில புத்தாண்டு வாழ்த்து



**மதுரை, ஜன 01-**

தமிழ்நாடு யாதவ மகாசபை தலைவர் நாட்டாமை கே.ஜெயக்குமார் ஆங்கில புத்தாண்டு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு யாதவ மகாசபை ஒருங்கிணைந்த மாவட்ட தலைவர் நாட்டாமை கே. ஜெயக்குமார் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது, தமிழ்நாடு யாதவ மகா சபை சார்பில் மலர்கின்ற புத்தாண்டில் தமிழக மக்கள் நிறைவான சந்தோஷத்தையும், தித்திக்கும் நிகழ்வுகளையும், நிறைந்த செல்வத்தையும், நீடித்த ஆயுளையும், நிம்மதியான வாழ்க்கையையும் வழங்கும் ஆண்டாக அமைந்திட தமிழ்நாடு யாதவ மகா சபை சார்பில் எனது ஆங்கில புத்தாண்டு நல் வாழ்த்துக்கள் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### ராஜபாளையத்தில்

# அங்கன்வாடி ஊழியர்களை பணி நிரந்தரம் செய்யக்கோரி ஆர்ப்பாட்டம்



**ராஜபாளையம், ஜன. 01-**

தமிழ்நாடு முழுவதும் உள்ள அங்கன்வாடி ஊழியர்களை பணி நிரந்தரம் செய்யவும், தனியாருக்கு தாரை வார்க்கும் முயற்சியை கைவிடக் கோரியும், அங்கன்வாடி ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் ரூ.28 ஆயிரம் வழங்குதல் உள்பட கோரிக்கைகளை வலியுறுத்தி ராஜபாளையம் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாநில செயற்குழு உறுப்பினர் விமலா ராணி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சி.ஐ.டி.யு. மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஜி. கணேசன், சிஐடியூ விசைத்தறி தொழிலாளர் சங்க மாநில செயலாளர் சோமசுந்தரம், ராஜபாளையம் கிளை தலைவர் கவிதா பொருளாளர் சத்யா ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி பேசினார்கள். வரும் ஜனவரி 6-ஆம் தேதி விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு மாபெரும் போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# பரமக்குடியில் பெருமாள் கோவில்களில் சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சி: திரளான பக்தர்கள் சாமி தரிசனம்



**பரமக்குடி, ஜன. 01-**

பரமக்குடியில் உள்ள பெருமாள் கோயில்களில் சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் உள்ள ஸ்ரீ சுந்தரராஜ பெருமாள் மற்றும் எமனேஸ்வரம் வரதராஜ பெருமாள் கோவில்களில் மார்கழி மாத வைகுண்ட ஏகாதசி முன்னிட்டு நேற்று முன்தினம் அதிகாலை சுமார் 5.00 மணி அளவில் சொர்க்கவாசல் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இக் கோயில்களில் நடந்த வைகுண்ட ஏகாதசி விழாவில் பரமபத வாசல் வழியாக பக்தர்களுக்கு பெருமாள் அருள் பாலித்தார். பரமக்குடி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். முன்னதாக பகல் பத்து உற்சவம் நடைபெற்றது. அன்று காலையில் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது. தொடர்ந்து பக்தர்களுக்கு பிரசாதங்கள் வழங்கப்பட்டது. அன்று மாலை பெருமாள் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இந்நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் தேவஸ்தான டிரஸ்டிகள் செய்திருந்தனர்.

# முடுவார்பட்டியில் பழனியாண்டவர், முருக பக்தர்கள் சார்பில் 33-ம் ஆண்டு 108 திருவிளக்கு பூஜை விழா



**அலங்காநல்லூர், ஜன. 01-**

மதுரை மாவட்டம் பாலமேடு அருகே முடுவார்பட்டி கிராமத்தில் ஸ்ரீ பழனியாண்டவர் முருக பக்தர்கள் பாதயாத்திரை குழுவினர் சார்பில் 33ஆம் ஆண்டு 108 திருவிளக்கு பூஜை அன்னதான விழா நடைபெற்றது. அங்குள்ள பஜனை மடத்தில் உலக மக்கள் நன்மைக்காக வேண்டியும், விவசாயம் செழிக்க வேண்டியும் அஷ்ட லட்சுமிகள் அருள்புரியும் 108 திருவிளக்கு பூஜை சிறப்பு கூட்டு வழிபாடு நடந்தது.

மலர்களால் அலங்கரிக்கப்பட்ட தீப விளக்குகளை பெண்கள் தீபம் ஏற்றி மலர் அபிஷேகம் செய்தனர். இந்த 108 திருவிளக்கு பூஜையில் கலந்துகொண்ட அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. தொடர்ந்து நாளை மாபெரும் அன்னதான விழா நடைபெறுகிறது. 3ஆம் தேதி காலையில் மாலை அணிந்து விரதம் இருந்த பக்தர்கள் பழனி பாதயாத்திரை புறப்படுதல் நடைபெறுகிறது. ஏற்பாடுகளை பழனி பாதயாத்திரை குழுவினர் செய்திருந்தனர்.

# திண்டுக்கல் துளிர் இலக்கிய நண்பர்கள் சார்பாக துளிர் விருதுகள் வழங்கும் விழா



**திண்டுக்கல், ஜன. 01-**

திண்டுக்கல்லில் துளிர் இலக்கிய நண்பர்கள் சார்பாக துளிர் விருதுகள் வழங்கும் விழா நடைபெற்றது.

திண்டுக்கல்லில் கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து 2025 ம் ஆண்டுக்கான விருதுகள் வழங்கும் விழா துளிர் அமைப்பின் தலைவர் முகமது யூசுப் அன்சாரி தலைமையில் திண்டுக்கல் யூனியன் கிளப் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவில் எழுத்தாளர் விக்கிரமாதித்தனுக்கு பவா செல்லதுரை நண்பர்களின் சார்பாக ஒரு லட்சம் பொற்கிழி வழங்கப்பட்டன.

சிறந்த எழுத்தாளர்களுக்கான நாகராஜன் விருதை திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையை சேர்ந்த ஜெயராணிக்கும் , ராம் தங்கத்திற்க்கும் ரொக்கப் பரிசு தலா ரூ 25 ஆயிரமும், நினைவு பரிசும் வழங்கப்பட்டன.

சிறந்த கவிஞருக்கான பிரான்சிஸ் கிருபா விருதினை பூவிதழ் உமேஷ்க்கு விருதும் மற்றும் ரொக்க பரிசும் வழங்கப்பட்டன. திண்டுக்கல்லில் பெருமைமிகு படைப்பாளர் விருதினை கவிஞர் யவனிகா ஸ்ரீராம்க்கு வழங்கப்பட்டன. முதல் முறையாக சிறந்த ஆய்வாளருக்கான விருதினை கடற்கரய் மத்தவிலாச அங்கதம்க்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் படைப்பாளர்கள் கவிஞர்கள் இலக்கியவாதிகள் அரசியல் பிரமுகர்கள் தொழிலதிபர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட எழுத்தாளர் கதை சொல்லி. பவா செல்லதுரை சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் திண்டுக்கல் துளிர் இலக்கிய நண்பர்கள் தலைவர் முகமது யூசுப் அன்சாரி, துணைத்தலைவர் ராஜசேகரன், செயலாளர் சுவாமிநாதன், பொருளாளர் நல் நாகராஜன் மற்றும் இலக்கிய கள நண்பர்கள் முனைவர் முத்தையா, செந்தில் குமரன் ,கார்த்திகேயன், பாண்டி மணிகண்டன், மனோகரன் , கவிஞர் விகுரா, செந்தில்குமார், இசக்கிமுத்து, பிரேம்குமார், முனைவர் கலைச்செல்வி, கவிதா செந்தில்குமார், லோகன் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தி.மு.க. ஆட்சி மீண்டும் அமைய கீழக்கரை கவுன்சிலர்கள் விருப்பம்

**ராமநாதபுரம், ஜன. 01-**

தி.மு.க. ஆட்சி அமைய வேண்டும் என்று ஆங்கில புத்தாண்டு நாளில் கீழக்கரை கவுன்சிலர்கள் விருப்பம் தெரிவித்து பேசினர்.

கீழக்கரை நகர்மன்ற கூட்டம் நடந்தது. நகர்மன்றத் தலைவர் ஷெஹானாஸ் ஆபிதா தலைமை வகித்தார். ஆணையாளர் கிருஷ்ண வேணி, நகர்மன்ற துணைத் தலைவர் ஹமீது சுல்தான், நகராட்சி பொறியாளர் அருள் முன்னிலை வகித்தனர். உதவியாளர் தமிழ்ச்செல்வன் வாசித்த 23 தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டு ஏற்கப்பட்டன. நகர்மன்ற மாற்றுத் திறன் நியமன உறுப்பினர் சபீர் அலி முதலமைச்சர் ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்தார். கடந்த மூன்றே முக்கால் ஆண்டில் 12-வது வார்டு தன்னிறைவு அடைந்துள்ளதாக நகர்மன்ற உறுப்பினர் பைரோஸ் பாத்திமா பெருமையுடன் கூறினார். கடந்த நான்கரை ஆண்டுகளில் சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பான அரசாக திகழும் முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு 2026 பொதுத்தேர்தலில் வென்று மீண்டும் ஆட்சி அமைக்க வேண்டும் என கவுன்சிலர்கள் பாட்ஷா, மீரான் அலி, காயத்ரி உள்ளிட்டோர் ஆங்கில புத்தாண்டு நாளில் விருப்பம் தெரிவித்து மகிழ்ச்சி பொங்க பேசினர். சென்னை விமான நிலையம் அருகே ஹஜ் இல்லம் அமைத்த முதலமைச்சர் ஸ்டாலினுக்கு சுயேட்சை கவுன்சிலர் பாட்ஷா நன்றி தெரிவித்தார்.

கவுன்சிலர்கள் முஹமது ஹாஜா சுகைபு, சப்ராஸ் நவாஸ், ஷேக் உசேன் ஆகியோர் விவாதங்களில் ஈடுபட்டனர். சாலை, குடிநீர் தொடர்பாக கவுன்சிலர்களின் விவாதங்களுக்கு பொறியாளர் அருள் பதிலளித்தார். கவுன்சிலர்கள் தெரிவித்த கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற நகராட்சி பொறியாளர், துப்புரவு அலுவலர் உள்ளிட்ட பணியாளர் களுக்கு நகர்மன்றத்தலைவர் ஷெஹானாஸ் அறிவுறுத்தினார்.



● முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று முகாம் அலுவலகத்தில், ஆங்கில புத்தாண்டையொட்டி தமிழக காவல்துறை தலைமை இயக்குநர் வெங்கடராமன் சந்தித்து வாழ்த்து பெற்றார்.




● துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் குறிஞ்சி முகாம் அலுவலகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு துறையின் சார்பில் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயற்கை இழை ஓடுதளப் பாதை மறுசீரமைக்கும் பணியினை காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பாராளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



● சென்னை திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதி, கன்னிகாபுரம் விளையாட்டு மைதானத்தை வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக்குழுமத்தின் சார்பில் மேம்படுத்தப்பட்டுவரும் பணிகளை இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரரை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது மேயர் ஆர்.பிரியா, தாயகம் கவி எம்.எல்.ஏ., உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## தமிழகம் முழுவதும் கடும் கட்டுப்பாடுகள்... (1-ம் பக்க தொடர்ச்சி)

காமராஜர் சாலையில் எந்த வித வாகனங்களுக்கும் அனுமதி அளிக்கப்படாது என்று போலீசார் தெரிவித்திருந்தனர்.

நள்ளிரவு 12 மணியளவில் புத்தாண்டு பிறந்ததும் மெரினாவில் கூடியிருக்கும் லட்சக்கணக்கான இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் ஹேப்பி நியூ இயர் என உற்சாக குரல் எழுப்பி புத்தாண்டை வரவேற்றனர். இந்த கொண்டாட்டத்தின் போது அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நடைபெறாமல் தடுப்பதற்காக சென்னை மாநகர் முழுவதும் 19 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். தமிழகம் முழுவதும் ஒரு லட்சம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அனைத்து கடற்கரை பகுதிகள், கோவில்கள், கிறிஸ்தவ ஆலயங்கள் உள்ளிட்ட வழிபாட்டு தலங்கள், பொது மக்கள் அதிகம் கூடும் இடங்கள் அனைத்திலும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு உள்ளன. நீலாங்கரை, துரைப்பாக்கம், மதுரவாயல் பை பாஸ் சாலை மற்றும் ஜி.எஸ்.டி. ரோடு ஆகிய பகுதிகளிலும், தாம்பரம் ஆவடி, செங்குன்றம் உள்ளிட்ட புறநகர் பகுதிகளிலும் பைக்ரேசை கட்டுப் படுத்துவதற்காக 30 தனிப்படைகள் ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. நேற்று இரவு 9 மணிக்கு பிறகு சென்னை மாநகரில் உள்ள 30 மேம்பாலங்கள் முழுமையாக மூடப்பட்டன.

சென்னையில் உள்ள 100-க்கும் மேற்பட்ட முக்கிய கோவில்கள், தேவாலயங்கள், இதர வழிபாட்டு தலங்கள், பொது இடங்களில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு நேற்று மாலை முதல் இன்று வரையில் பொதுமக்கள் கடலில் இறங்கவோ, குளிக்கவோ தடை விதிக்கப்பட்டு உள்ளது. இதற்காக மெரினா, சாந்தோம், எலியட்ஸ் மற்றும் நீலாங்கரை உள்ளிட்ட கடற்கரை பகுதிகளில் போலீசார் தீவிரமாக கண்காணிப்பு பணியில் ஈடுபட உள்ளனர். தற்காலிக காவல் உதவி மையங்களும் அமைக்கப்பட்டிருந்தன.

மெரினாவில் மணல் பரப்பில் இறங்குவதற்கு கூட நேற்று இரவு போலீசார் அனுமதிக்கவில்லை. இதைத் தாண்டி யாராவது கடற்கரை மணல் பகுதிக்குள் நுழைவதை தடுப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அவசர மருத்துவ உதவிக்காக மெரினாவில் முக்கிய இடங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களின் அருகில் ஆம்புலன்ஸ் வாகனங்கள் மருத்துவ குழுவினருடன் தயார் நிலையில் நிறுத்தி வைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

கூட்ட நெரிசலை பயன்படுத்தி பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் பாலியல் சீண்டல் சம்பவங்களில் ஈடுபடுபவர்களை பிடிப்பதற்கு சாதாரண உடைகளில் போலீசார் கண்காணித்தனர். புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது தனியார் இடங்களில் கஞ்சா, அபின் உள்ளிட்ட போதை பொருட்கள் பயன்படுத்துவதற்கும் போலீசார் முழுமையாக தடை விதித்து உள்ளார்கள். இது தொடர்பாக சென்னை கலைவாணர் அரங்கில் நேற்று முன்தினம் புத்தாண்டு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்து இருப்பவர்களிடம் போலீஸ் அதிகாரிகள் ஆலோசனை நடத்தினர். இந்த கூட்டத்தில் போதை பொருட்களை யாராவது பயன் படுத்தினால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொது இடங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகள் உட்பட அனைத்து இடங்களிலும் பட்டாசு வெடிக்கவும் தடை விதிக்கப்பட்டு உள்ளது. இப்படி சென்னை, கோவை, திருச்சி மதுரை, நெல்லை, கன்னியாகுமரி என அனைத்து முக்கிய மாநகர பகுதிகளிலும் கொண்டாட்டத்துக்கான ஏற்பாடுகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், தமிழகம் முழுவதும் ஒரு லட்சம் போலீசார் பாதுகாப்புக்காக உஷார்படுத்தப்பட்டு உள்ளனர்.

## முதல்வர் ஸ்டாலின்... (1-ம் பக்க தொடர்ச்சி)

உயர்நிலைக் குழு அமைத்தது, மாநிலக் கல்விக் கொள்கையை வெளியிட்டது, கல்வி நிதிக்காக மத்திய அரசிடம் உரிமைக் குரலை எழுப்பியது, கவர்னரின் அதிகார மீறலுக்கு எதிரான வரலாற்றுச் சிறப்புமிக்க சுப்ரீம் கோர்ட் தீர்ப்பினைப் பெற்றது என வழக்கம் போல இந்த ஆண்டும் மாநில உரிமைகளுக்கான நமது போராட்டங்களுக்கு குறை வே இல்லை. மொத்தத்தில் தமிழ்நாடு யாருக்கும் தலைகுனியாது, தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என உலகத்துக்குப் பறைசாற்றிய ஆண்டுதான் 2025.

நாம் இதுவரை பெற்ற வெற்றிகள் தந்த ஊக்கத்தோடும், போராட்டங்களால் பெற்ற துணிவோடும் 2026-ல் மாபெரும் வெற்றியை நோக்கி முன்செல்கிறோம்! நாம் என்றால் தமிழ்நாட்டு மக்களாகிய நீங்கள் அனைவரும் பெறப்போகும் வெற்றியைத்தான் குறிப்பிடுகிறேன். அமைதியும், நல்லிணக்கமும், மகிழ்ச்சியும், புதிய வெற்றிகளும் நிறைந்த ஏற்றமிகு ஆண்டாக 2026 அனைவருக்கும் அமைந்திட எனது புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாடு முழுவதும்... (1-ம் பக்க தொடர்ச்சி)

வர மற்றொரு புறம் பொங்கல் பரிசு தொகுப்பை நெரிசல் இல்லாமல் விநியோகிக்க உணவு மற்றும் கூட்டுறவுத் துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. வீடு, வீடாக டோக்கன் விநியோகித்து ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான டோக்கன்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான டோக்கனும் அச்சிடப்பட்டு தயார் நிலையில் உள்ளன. அரசிடம் இருந்து அறிவிப்பு வெளியானதும் தேதி குறிப்பிட்டு வீடு வீடாக டோக்கன் வழங்கப்படும். ரொக்கப் பணம் எவ்வளவு என்ற அறிவிப்பு ஓரிரு நாளில் வெளியாகும் என தகவல் வெளியாகியுள்ளது.



● சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை கழகத்தில் நேற்று எடப்பாடி பழனிசாமி மாவட்ட செயலாளர்களுடன் முக்கிய ஆலோசனை நடத்தினார். இதில் மாவட்ட செயலாளார்கள் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு மக்களுக்கு

# நிம்மதியை வழங்கும் ஆண்டாக 2026 புத்தாண்டு அமையட்டும்

### எடப்பாடி பழனிசாமி வாழ்த்து

சென்னை, ஜன. 01-

புத்தாண்டு தமிழக மக்களுக்கு நிம்மதியான வாழ்க்கையை வழங்கும் ஆண்டாக அமையட்டும் என்றும் நிறைவான சந்தோஷத்தையும், தித்திக்கும் நிகழ்வுகளையும் வழங்கும் ஆண்டாக அமையட்டும் என்றும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி புத்தாண்டு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருப்பதாவது:- மலர்கின்ற புத்தாண்டை மகிழ்ச்சியுடனும், உற்சாகத்துடனும் கொண்டாடும் அன்பிற்கினிய தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலங்களில், மக்கள் நலன் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு பல்வேறு முத்தான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதோடு, மக்கள் எவ்வித அச்சமுமின்றி நிம்மதியுடன் வாழ்ந்து வந்ததை, இந்த நேரத்தில் பெருமிதத்தோடு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மலர்கின்ற இப்புத்தாண்டு, தமிழக மக்களுக்கு நிறைவான சந்தோஷத்தையும், தித்திக்கும் நிகழ்வுகளையும், நிறைந்த செல்வத்தையும், நீடித்த ஆயுளையும், நிம்மதியான வாழ்க்கையையும் வழங்கும் ஆண்டாக அமைந்திட எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து, தமிழக மக்கள் அனைவருக்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி ஜெயலலிதா ஆகியோரது தூய வழியில் ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை உரித்தாக்கிக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

### சாலை வரி விலக்கு 2 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு:

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கம் நன்றி

சென்னை, ஜன. 01-

சாலை வரி விலக்கு நீட்டிப்பு செய்த முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கம் நன்றி தெரிவித்துள்ளனர்.

அனைத்து ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கத் தலைவர் அன்பழகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மின்சார பேருந்துகளுக்கு வழங்கப்பட்டு வந்த சாலை வரி விலக்கு 31-ந்தேதி (நேற்றுடன்) முடிவடைய இருந்த நிலையில், அதை மேலும் 3 ஆண்டுகள் நீட்டிக்க ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கம் சார்பாக தமிழ்நாடு அரசிடம் கோரிக்கை வைத்தோம்.

எங்களின் கோரிக்கையை பரிசீலித்து, மின்சார பேருந்துகளுக்கான சாலை வரி விலக்கை மேலும் 2 ஆண்டுகளுக்கு நீட்டித்த முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜாவுக்கும் ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கம் சார்பில் மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், மராட்டிய மாநில அரசு மின்சார பேருந்துகளை ஊக்குவிக்கும் நோக்கில், அரசு கட்டுப்பாட்டில் உள்ள சாலை சுங்கச்சாவடிகளில் மின்சார பேருந்துகளுக்கு முழுமையான சுங்கக் கட்டண விலக்கு வழங்கி வருவது பாராட்டத்தக்க முன்னுதாரணமாக உள்ளது. அதே போன்று, தமிழ்நாடு அரசும் மாநிலத்தில் பசுமை போக்குவரத்தை வளர்க்கும் வகையில், மின்சார ஆம்னி பேருந்துகளுக்கு அரசு கட்டுப்பாட்டில் இயங்கும் அனைத்து சுங்கச்சாவடிகளிலும் முழுமையான சுங்கக் கட்டண விலக்கு வழங்க வேண்டும் என கோரிக்கை வைக்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



● சென்னை தரமணி, தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படக் கல்லூரி மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவன கூட்டரங்கில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சென்னை மண்டலத்திற்கான பணி ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் வைத்திநாதன், செய்தி மக்கள் தொடர்புத்துறை கூடுதல் இயக்குநர்கள் செல்வராஜ், பாஸ்கரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.